

# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

January 2024 ஜனவரி 2024

Retail Selling Price 25

Page 1

Volume - 15, Issue - 11


# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)




சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹூஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை



ஜமாதுல் அவ்வல்- ஜமாதுல் ஆகிர்

ஜனவரி 2024
Volume - 15 Issue -11


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்*
*திருமறைப் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*உமர் (ரலி) புராணம் –நயம்.*
*அறபு இலக்கிய வளர்ச்சி*
*சபாஷ் ....சரியான பதில்!*
*வாரிஸ்அலி மௌலானா பாராட்டுவிழா!*
*இஸ்லாம் போராளிகள் மதமா?*
*திருமணத்துக்கு முன்....*
*சர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் (ரஹ்)*
*புற்று நோய்க்கு மருந்து!*
*அல்லாஹ் என்னும் திருநாமம் அதிசயம்!*
*யாஸீன் நாயகம் (ரலி) ஸலாம் பைத்து.*
*சிரியா வணிகப் பயணம். (கவிதை)*
*88 ஆம் புனித விழா சொற்பொழிவுகள்*
*மற்றும் வழக்கமான செய்திகள்.*

# உள்ளமைச் சூரியன் ஓய்வு பெற்றது!



காலத்தின் உத்தமர், கண்களின் குளிர்ச்சி, அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருட்திருப்பேரர், ஆயிரமாயிரம் முரீதுப் பிள்ளைகளின் ஆத்மத்தந்தை, தரீக்கத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் காமில் ஷைகு,

மறைஞானப்பேழை, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன், அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை, அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் நிறுவனர்,

**குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் உஜூத் ,**

**ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகம் அவர்கள்**

ஹிஜ்ரி 1445 ஜமாதுல் ஆகிர் பிறை 20– 3.01.2024 புதன் கிழமை காலை இப்பூவுலகை விட்டு உடல்வாழ்வு துறந்து ஆத்மவாழ்வைத் தொடங்கினார்கள். மறுநாள் 4.01.2024 வியாழன் மக்ரிபுக்குப்பின் திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி வளாகத்தில் நல்லடக்கம் நடைபெற்றது என்பதை ஆழிய வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

விரிவான செய்திகள் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் காணலாம்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



*நீயோ ஒரு சிறு உருவத்தில் உள்ள பெரும் பிரபஞ்சம். உன்னுள் தான் உலகம் முதல் மற்றெல்லா அண்ட கோளங்களும் அண்ட வெளிகளும் அடங்கியுள்ளன. உன்னைப் பற்றி நீ சிந்திப்பாயாக. ஏனைய பொருட்களைப் பற்றி நீ சிந்திப்பதைவிட உன்னைப் பற்றியே நீ சிந்திப்பது நீயுயர்வடைவதற்கு இலகு வழியாகும். உன்னைப் பற்றி நீ அறிந்து கொண்டால் உனக்குப் புறம்பான ஏனைய பொருட்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. காரணம், உன்னுள்ளேயே அவையெல்லாம் அடங்கி ஒடுங்கியுள்ளன.*

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

செய்க்மாரைப் பற்றிய சில ஹதீஸும் கொடுக்கப்படுகிறது.

ஒரு செய்காகிறவர் தம்முடைய கூட்டத்தில் ஒரு நபிய்யின் உம்மத்துகளுக்கு நபியைப் போலாய் இருக்கும் என்பதாகும். (இப்படியான செய்க் ஒரு வலிய்யோ அல்லது குத்போ அல்லது குத்புல் அக்தாபோ அல்லாது பொதுவாக மேற்கூறப்பட்டவர்களின் கலீபாக்களாகவுமிருக்கலாம்.) இப்படியான செய்க்களின் (கலீபாக்களின்) முரீதீன் தன் செய்கையே பற்றிக்கொள்வதோடு மேற்கூறப்பட்ட வலீமார்கள் குத்புமார்களின் துஆ, நிர்ணயம் இவைகளை மதிப்பாகத் தேடிக் கொள்ள வேண்டும்.

சிறப்பான ஒரு செய்கிடத்தில் உதவி தேடுவது நபிகள் நாயகத்திடமிருந்து உதவி தேடுவது போலாகும். ஏனென்றால், பரிசுத்த ஹக்கிடமிருந்து ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் மூலமாக நபி நாயகத்துக்கு (தீன்) கிடைத்தது. எனவே ஹக்கு அவர்களைத் தன் மள்ஹராகத் தெரிந்து கொண்டது. இவர்களிடமிருந்து பைஅத்துப் பெற்ற ஸகாபாக்கள் அல்லது விசேஷமாக கலீபாக்களிடமிருந்து கிலாபத்தைப் பெற்ற சந்ததி வாரிஸ்களாக வந்தவர்களையே (முரீத்களை)யே செய்க் என்போம். இப்படியான செய்கைப் பின்பற்றியவர்கள் பைஅத் ஸில்ஸிலாவில் நபி (ஸல்) அவர்களைப் போய் அடைவதாலே நாயகத்தில் நின்று உதவி தேடியதாய் தன்செய்கிடம் உதவியைத் தேடுவான். இந்த முறையிலே முரீதிலோ, பைஅத்திலோ எம் குடும்பத்துக்கு நிகரான குடும்பம் எங்குமே இராது. அல்ஹம்து லில்லாஹ்.

நபி நாயகம் என் பாட்டனர் ரஸூல் ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தொடுத்து நான்வரை குத்துபுமாராகிய செய்க்மார்களே இருந்து வந்திருக்கிறார்கள். அல்ஹம்து லில்லாஹ். இந்தப் பலக்கயிற்றைப் பற்றிப்பிடிக்கக் கிடைத்த பாக்கியம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் உரிமையானது. தன் செய்கின் பேரிலும் அவர் ஏவல் பேரிலும் அன்பு, ஆதரவு, ஆசை இவைகள் அவசியம் இருத்தல் வேண்டும். தன்னுடைய செய்கையே கிப்லாவாகக் கொள்ளவேண்டும். தன் செய்கில் ஒரு முரீதுக்கு வெறுப்பிருந்தால் தன் பைளினுடைய வாசல் அடைக்கப்பட்டுப் போவதோடு எந்த இல்ஹாமும் எந்த ஹகீகியத்தும் எந்த அஸ்ரார்களும் வெளியாகாது.

*(ஸாஹிபுல் வக்த். ஷம்ஸுல் வுஜூத், ஹக்குல் முபீன், குத்புஸ்ஸமான், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்யி வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா. அல்ஹாஜ். எஸ்.அப்துல் கரீம் ஜமாலி அவர்களுக்கு எழுதிய 28.8.1966 பட்டோலையிலிருந்து.)*

*கலீபா. டாக்டர் அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் வாட்ஸ்அப் பதிவிலிருந்து..*

## கொய்த மலர்



# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّوْرَ

உங்களுடைய ஒப்பந்தத்தை நாம் எடுத்துக் கொண்டு, உங்களுக்கு மேலே தூர் (ஸீனா) மலையை நாம் உயர்த்தினோம்.

خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ

உங்களுக்கு நாம் ஈந்த (மார்க்கத்)தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

وَّاذْكُرُوْا مَا فِيْهِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿٦٣﴾ ٦٣

அதிலுள்ளவற்றை நினைவு கூருங்கள் (அப்படியாயின்) நீங்கள் பயபக்தி யுடையவர்களாயிருக்கப் போதும்.

ثُمَّ تَوَلَّيْتُمْ مِّنْ بَعْدِ ذٰلِكَ

அதற்குப் பின்னும் (ஒப்பந்தத்தினை விட்டும்) திரும்பிவிட்டீர்கள்.

فَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ

உங்கள் மீது அல்லாஹு தஆலாவின் அருளும் அவனது கருணையும் இல்லையாயின்,

لَكُنْتُمْ مِّنَ الْخٰسِرِيْنَ ﴿٦٤﴾ ٦٤

நிச்சயமாக நீங்கள் நட்டவாளிகளானீர்கள்.

٦٥

وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِيْنَ اعْتَدَوْا مِنْكُمْ فِى السَّبْتِ فَقُلْنَا لَهُمْ كُوْنُوْا قِرَدَةً خٰسِـِٕيْنَ ﴿٦٥﴾

சனிக்கிழமையிலே (உள்ள சட்டவரம்பை) உங்களிற் சிலர் கடந்து (மீறி) விட்டமையும் இதனிமித்தம் அவர்களுக்கு "நீங்கள் இழிவான, (தாழ்ந்த, விரட்டப்பட்ட குரங்குகளாகுக" என்று நாம் கூறியதையும் திடமாய் நீங்கள் அறிந்துள்ளீர்கள்.

فَجَعَلْنٰهَا نَكَالًا لِّمَا بَيْنَ يَدَيْهَا وَمَا خَلْفَهَا وَمَوْعِظَةً لِّلْمُتَّقِيْنَ ٦٦

அவர்களுக்கு முன்னே இருப்பவர்களுக்கும் அவர்களுக்குப் பின்னே வருபவர்களுக்கும் (குரங்குகளாய் மாறிய) அவர்களை, (வேதனைப்படும்) உதாரணமாகவும் இறையச்சமுடையோருக்குப் போதனையாகவும் அமைத்தோம்.

(21)

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖٓ اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تَذْبَحُوْا بَقَرَةً ؕ قَالُوْٓا اَتَتَّخِذُنَا هُزُوًا ؕ

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம் கூட்டத்தினருக்கு "ஒருபசுவைப் பலியிடும்படி அல்லாஹ் உங்களுக்குப் பணிக்கின்றான்" என்ற பொழுது, நம்மை நீங்கள் கேலி பண்ணத் தொடுத்தீர்களா? என்று கேட்டார்கள்.

قَالَ اَعُوْذُ بِاللّٰهِ اَنْ اَكُوْنَ مِنَ الْجٰهِلِيْنَ ٦٧

(அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்)"நான் (கேலிபண்ணும்) மூடர்களினின்று முள்ளவனாதலை விட்டும் அல்லாஹுவிடத்துப் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்றார்கள்.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

63. தூர் எனும் மலையை நாம் உங்களுக்கு மேல் உயர்த்தி உங்களிடம் வாக்குறுதி வாங்கிய சமயத்தில் நாம் உங்களுக்குக் கொடுத்த (தவ்ராத் எனும் வேதத்) தை உறுதியாகக் கடைப்பிடியுங்கள். அதிலுள்ளதை (எப்பொழுதும்) சிந்தனையில் வையுங்கள். (அதனால்) நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆவீர்கள் (என்று கூறினோம்)

64. இதற்குப் பின்னும் நீங்கள் (வாக்கு) மாறிவிட்டீர்கள். ஆனால் உங்கள் மீது அல்லாஹ்வின் அருளும் அவனது அன்பும் இல்லாதிருந்தால் நீங்கள் (முற்றிலும்) நஷ்டமடைந்தவர்களில் ஆகியிருப்பீர்கள்.

65. மேலும் சனிக்கிழமையில் (மீன் பிடிக்காதீர்கள் என்ற தடையை) உங்களில் எவர்கள் மீறிவிட்டார்கள் என்பதையும் அதற்காக நாம் அவர்களை நோக்கி, நீங்கள் சிறுமைப்பட்ட குரங்குகளாகி விடுங்கள் எனக் கூறினோம் என்பதையும் நீங்கள் தெளிவாக அறிந்தேயிருக்கிறீர்கள்.

66. ஆகவே இதை (அக்காலத்தில்) அவர்களுக்கு எதிரில் இருந்தவர்களுக்கும் அவர்களுக்குப்பின் (பிற்காலத்தில்) வருபவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை மிகுந்த படிப்பினையாகவும் இறையச்சம் உடையவர்களுக்கு ஓர் உபதேசமாகவும் ஆக்கினோம்.

67. தவிர, ஒரு மாட்டை நீங்கள் அறுக்கும்படி நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான் என மூஸா தன் சமூகத்தார்களுக்குக் கூறியதற்கு அவர்கள் (மூஸாவே) நீர் எங்களைப் பரிகாசம் செய்கிறீரா? என்றார்கள். (அதற்கு) நான் (பரிகாசம் செய்யும்) அறிவீனர்களில் ஆவதை விட்டும் அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடுகிறேன் என்றார்.

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

■ சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் முரீதாவும் திருச்சி மர்ஹூம்.எஸ்.ஏ. நிஹ்மத் இப்றாஹீம் (ஹ.கா) அவர்களின் மனைவியும் திருச்சி. ஏ.மெ.சபை. என்.ராஜாமுஹம்மது (ஹ.கா) அவர்களின் தாயாருமான வி. செய்யது பாரிஷா பீவி (ஹ.கா) அவர்கள் 04.12.2023 திங்கள் கிழமை வஃபாத்தானார்கள். அன்னாரின் ஜனாஸா 05.12.2023 செவ்வாய்க்கிழமை திருச்சி பீமநகர் துருப்பு பள்ளி கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து மறுமை சுவனப்பேறுகளை அருள்வானாக! ஆமீன்!

■ நமது மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்த கொடிக்கால் பாளையம் மௌலவி. ஏ. ஷாஹுல் ஹமீது பாகவி ஹள்ரத் அவர்கள் 19.12.2023 அன்று வஃபாத்தானார்கள். கொடிக்கால் பாளையம் பெரியபள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. அன்னாரின் ஜனாஸாவில், மதுரஸா நாளிர் என்.ஸயீது முஹம்மது மிஸ்பாஹி, உஸ்தாதுகள் அமானத் ஹள்ரத், ஹாபிழ் காஜா ஹள்ரத் மற்றும் திருச்சி பக்ருத்தீன் ஹக்கிய்யுல் காதிரி, அஸாருத்தீன் ஹக்கிய்யுல் காதிரி, ஹாஜி. கே.பி.எம். பஷீர் அஹ்மது ஹக்கிய்யுல் காதிரி, மற்றும் முரீதுப்பிள்ளைகள் கலந்து கொண்டனர். அல்லாஹ் ஹள்ரத் அவர்களின் சேவையை கபூல் செய்து மறுமை சுவனப் பேறுகளை அருள்வானாக! ஆமீன்!

எம்மை நம்பியெம் தீட்சதர் வாழ்வரேல்
ஏனிகம் உகந்தனில் அஞ்சுதல் வேண்டும்?

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

# திருக்குறள்

பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்

வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (481)

தன்னைவிட வலிமையான கூகையை பகல் நேரத்தில் காகம் போரிட்டு வென்று விடும். அவ்வாறே பகைவரை வெல்லும் வேந்தர்க்கு தகுந்த காலம் வேண்டும்.

# தீன் குறள்

முடிவுநாள் ஒப்பார்க்கு முற்றும் நரகே

விடிவுநாள் இல்லை அவர்க்கு (250)

(மறுமை எனப்படும் முடிவு நாளை நம்பாதவர்க்கு உறுதியாக நரகுதான். அத்தகையவருக்கு விடிவு நாளே கிடையாது.)

(தத்துவக் கவிஞர். இ. பதுருத்தீன்)

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

جمادی اول

**ஜமாதுல் அவ்வல்**

| | |
|---|---|
| 1. | சம்பைப் பட்டினம் ஜமாலிய்யா மௌலானா (ரலி) உரூஸ் |
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

جمادی ثانی

**ஜமாதுல் ஆகிர்**

| | |
|---|---|
| 5 | மௌலானா ரூமி (ரஹ்) மறைவு |
| 2 | கம்பம் அம்பா நாயகம் கந்தூரி |
| 10 | நாகூர் ஷாஹுல் ஹமீது பாதுஷா (ரலி) கந்தூரி |
| 14 | இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) மறைவு |
| 17 | காயிதே மில்லத் (ரஹ்) மறைவு |
| 22 | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) மறைவு |

**மறைஞானப்பேழை சந்தா செலுத்தி பத்திரிகை வளர்ச்சிக்கு உதவிடுவீர்!**

**சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்**

# அமுத மொழிகள்



♦ ஹக்கு ஸுப்ஹானஹு வதஆலாவுக்கு **மராதிபுல் வுஜுபிய்யா** – அவசியமான தரங்கள் என்பதிலே ஊண், குடி எதுவுமில்லை. **மராதிபுல் இம்கானிய்யா** எனும் இடன்பாடான தரங்களுக்கு முன்னிருந்த மராத்திபுகளிலிருந்து இறங்கியபோது என்னில் இரண்டறக் கலந்த ஃபகீர் எனும் இன்ஸான் காமிலுடைய ஊணும் குடியும் தான் என்னுடைய ஊணும் குடியுமாகும்.

இன்ஸான் காமிலான பகீர் தன்னுடைய செயல்கள், வருணனைகள் தாத்து என்னும் அதுவேயான பிரணவம் எல்லாவற்றையும் என்னில் உள்ள உகப்பு அல்லது காதலுக்காக அழித்துவிட்டான். ஆதலால் அதற்குப் பகரமாக என்னுடைய 'அப்ஆல்' எனும் செயல்களையும் ஸிபாத் எனும் வருணனைகளையும் தாத்து என்னும் அதுவேயான பிரணவத்தையும் அவனுக்குக் கொடுத்தேன். அதனால் அவனுடைய செயல்கள் அனைத்தும் என்னுடைய செயலாகும்.

♦ ஹக்கில் தன்னையழித்துத் தன்னையறிந்த இன்ஸானுக்கே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. தன்னையறிந்தவனே தன்னுடைய ஹக்கையறிந்தவன், தன்னைக் கடலில் அலைபோல் ஹக்கில் அழித்துக் கொண்டவனுடைய செயல் களெல்லாம் ஹக்குடைய செயல்களாகும். ஏனெனில் அவன் அதை அறிவான். ஆயினும் எல்லா இன்ஸானுக்கும் இது பொருந்துமானாலும் ஹக்கில் தன்னை அழித்துக் கொள்ளாதவன் தன்னையே தான் அறிந்து கொள்ளாதவன். தான் செய்யும் அனைத்துச் செயலும் ஹக்கின் செயல் என்பதை அறிந்து கொள்ளமுடியாது ஹக்கின் திரையானது அவனை மறைத்துக் கொண்டிருக்கிறது. எனவே திரையில் மறைந்து இணையின் பிடியில் சிறைவாரப்பட்டவனாவான்.

**கௌதுல் அஉளமே! அந்தரங்கப் பிரயாணத்தை விட்டும் தடுக்கப்பட்டவன் வெளிப் பிரயாணத்தைக் கொண்டு சோதிக்கப்படுவான்.**

**வெளிப் பிரயாணத்திலோ தூரத்தைத்தவிர என்னில் நின்றும் அதிகமாகாது.**

♦ ******அந்தரங்க விளக்கமான இறைஞானத்தில் சிந்திக்காது தடைப்பட்டவன் வெளிரங்கத்தை மட்டும் சிந்திக்கிறதனால் இறைவனின் சோதனைக்கு ஆளாகிறான். அவ்வாறு உள்ளவனுக்கு அந்தரங்கச் சிந்தனை மிக தூரமாகிக் கொண்டே போகும்.*

♦ **விளக்கம் :** அதாவது: எவன் அந்தரங்கப் பிரயாணம் செய்யாமல் அதை வெறுத்தானோ – அதாவது: பாதினான வழியான ஹக்கைத் தேடுவதை அல்லது அறிவதை நிறுத்திக் கொண்டானோ அல்லது அறியாமையினால் வெளி விஷயங்களை மட்டும் அறிந்து வந்தானோ நிச்சயமாக என்னால் – அவனுடைய வெளிப் பிரயாணத்திலே – வெளி உலகை மட்டும் தேடுவதிலே அவன் அதைக்கொண்டே அறியாமையால் தூரப்பட்டுக் கொண்டேயிருப்பான். அவன் ஹகீகத்தான உண்மையை அறிய மாட்டான். இதுதான் அவனுக்கு என்னுடைய சோதனை.

♦ இறைவனின் சங்கையான நிலைக்குள் ஒருவன் புகுத வேண்டுமானால் அவன் சிலவிடயங்களை தன்னிலிருந்து நீக்கிக் கொள்ள வேண்டும். அல்லது ஹராமாக்கிக் கொள்ள வேண்டும். அவை ஆட்சி, அமர உலகு, சக்தி உலகு ஆதிய மூன்றும். இவற்றை மனிதன் திரும்பியும் பார்க்கக் கூடாது. ஏனெனில் ஆட்சி யென்பது , தலைமைத்துவம் எனும் மமதை. இது, கற்றவனுக்கு அல்லது பொது மனிதனுக்கு செய்த்தானாகும் (பேயாகும்). அமர உலகு என்பது, சித்துக்காக அமர உலகில் வலிமைபெற அதை மட்டுமே நாடி அதில் ஆசைவைப்பது ஆரிபாகிய ஞானிக்கு செய்த்தானாகும். சக்தி உலகென்பது, அதிலே காட்சிகளையும் கண்டு சித்துகளையும் செய்து இறைவனை மறந்து வீணாகவிருப்பது இறைவனை இரண்டறக் கலக்க விரும்புவோனுக்கு செய்த்தானாகும். இவற்றில் எதை எவன் விரும்புவானோ அவன் இறையிடத்திருந்து விரட்டப்பட்டவன். எனவே இறைவனை எவன் விரும்புவானோ அவன் வேறெதிலும் விருப்பங்கொள்வது அறவே நீக்கப்படல் வேண்டும். இறைவனிலேயே தனது முழு எண்ணமும் இருத்தல் வேண்டும். அப்படியாயினே அவன் இறைவனில் இரண்டறச் சேரும் தன்மையுடையவனாவான்.

**(ரிஸாலத்துல் கௌதிய்யா நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள்.)**

# அமுத மொழிகள்

## இன்றைய முஸ்லிம்களின் இழிநிலை !

இன்று ரசூல் ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெயர்களை வைத்துக் கொண்டு ஒருவர் குடிகாரனாக இருக்கின்றார். இந்த அளவு இஸ்லாத்தின்நிலை வந்துவிட்டது.

ஒரு நபியின் பெயரை வைத்துக் கொண்டு வட்டி எடுக்கின்றனர். அந்த அளவு இஸ்லாத்தின் நிலை வந்துவிட்டது. இஃதல்ல இஸ்லாம்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் என்ன சொன்னார்களோ எப்படி நடக்கச் சொன்னார்களோ அதன்படி நடப்பதுதான் இஸ்லாம்.

ஆகவே, ஆண்களாயிருப்பினும் பெண்களாயிருப்பினும் இஸ்லாத்திற்கு – ஷரீஅத்திற்கு முரணாகவோ மாற்றமாகவோ நடப்பது சரியல்ல !

ஆண்களும்–பெண்களும் அவரவர்களின் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும் எனும் சட்ட திட்டங்கள் அனைவருக்கும் தெரியும் ! அவற்றைப் பேணி பெண்கள் நடந்து கொள்ள வேண்டும்!

அவ்வாறே ஆண்களும் அவர்களின் சட்டதிட்டங்களைப் பேணி நடந்து கொள்ள வேண்டும். இந்த விஷயங்களை எமது முரீத்கள் அனைவரும் அவசியம் கருத்திற்கொண்டு நடந்து கொள்ள வேண்டும்

## வலிமார்களின் உள்ளம்!

ஒரு ஷைகு தமது சகாக்களுடன் ஒரு வழியே நடந்து சென்ற போது ஒரு நாய் படுத்திருந்தது! அதனைக் கண்ட ஷைகு தமது சகாக்களுடன் அந்த நாய்க்குத் 'தொந்தரவு' கொடுப்பதைத் தவிர்த்து வேறு வழியே சுற்றிச் சென்றார்களாம் !

வலிமார்களின் உள்ளம் இப்படித்தான் இருக்கும் ! பிற உயிரின் மீது காட்டும் அன்பு இந்த அளவிற்கு இருக்க வேண்டும்.

குழந்தைகளிடமும் வயதானவர்களிடமும் அன்பும் கருணையும் காட்ட வேண்டும். குழந்தைகளுக்கு அன்பு, கருணை, அல்லாஹ்வுடைய பயம் அல்லாஹ்வுடைய பயம் ஆகியனவற்றை சிறு வயதிலேயே ஊட்ட வேண்டும். பெண் குழந்தைகள் அவற்றை நல்ல முறையில் வளர்த்து தர்பியத் பண்ணி வந்தால் அவைகள் ஹக்கின் பேரருட்செல்வங்கள். ஆதலால் எதற்கு ஆயாசப்பட வேண்டும்? அவர்களுக்கு ஹக்கு அவர்களைக் கொண்டு நிறைந்த ரஹ்மத்தையும் பரக்கத்தையும் வைத்துள்ளான்.

படித்தேன்
பகர்கிறேன்.

உள்ளம் கவரும்

(கலீபா. ஆலிம் புலவர்)

# உமர் ரலி புராணம்

**சுரிமண னிலப்ப ரப்பு**
**சுற்றிய தரபு நாடு**
**விரிதரு நானி லத்தே**
**வெறுஞ்சுர மதிக முண்டு**
**பெருமணற் காலும் வீசின்**
**பெய்ம்மழைப் பனிநி கர்க்கும்**
**கருமழை மூட்டம் போலும்**
**காணவே தோற்று மாமே.**

## பொருள்:

சுரிக்கும் மணலினாலான நிலப் பரப்பு அறபு நாட்டைச் சுற்றியுள்ளது. அவ்வாறு விரிந்துள்ள நிலப்பரப்பின் கண்ணே எதுவுமற்ற பாலை நிலம் அதிகமுண்டு. பெரிய மணற்காற்று வீசின் பொழிகின்ற மழையினாலுண் டான பனிபோற் றோற்றும். சூல் கொண்ட மேக மூட்டம் போல் பார்க்க மணற் காற்று வீசுழித் தோற்றும்.

கால் வைத்தால் புதைந்து உள்ளே இழுக்கின்ற நிலப்பரப்புதான் சுற்றியுள்ளது. அந்த நீண்டு கிடக்கும் வெளியில் குன்றுகள் , மலைகள், மரங்கள் எதுவுமில்லாத பாலை நிலமே அதிகம்.

வழக்கு மொழியில் சுரிய வாங்குவது என மக்கள் பேசுவார்கள். உதாரணமாக நாயகத்தைத் துரத்திச் சென்றபோது சுராக்காவின் குதிரையின் கால்களை பூமி சுரிய வாங்கியது என எழுதுவார்கள். சுரிவது என்றால் புதைவது எனப் பொருள் விளங்கலாம்.

பாலை வனத்தில் பெரிய மணற்காற்று வீசும்போது ஏற்படும் புழுதியின் தோற்றம் வானில் சூல்கொண்ட மழை மேகம் போலவும் அதன் பனி மூட்டம் போலவும் தோற்றம் தரும்.

**பாலைய தென்ப தாலும்**

**பருஞ்சுரங் காய்ப்ப தாலும்**

**சோலைய தல்ல தாலும்**

**தூயநீ ரில்ல தாலும்**

**சாலவுஞ் சிறந்த தான**

**தண்பயிர் பச்சை யெல்லாங்**

**காலமுஞ் செய்தி டற்கு**

**கனிவது பெற்றி லையே.**

## பொருள் :

அது பாலை நிலம் என்பதாலும் பெரும் பாலை வனம் மணலைக் காய்ப்பதாலும் அது, மரங்கள் நிறைந்த சோலை அல்ல என்பதாலும். அங்கே தூய்மையான நீர் இல்லை யென்பதாலும் மிகச் சிறந்ததான குளிர்ந்த பயிர் பச்சைகளை எப்பொழுதும் உற்பத்தி செய்திடற்கான பருவத்தை அந்நிலம் பெற்றதில்லை.

**விளக்கம்:**

அந்த நிலம் பயிர் பச்சைகள் விளைவதற்குண்டான கனிவை –இளக்கத்தைப் பெறவில்லை. ஏன்?

அது சூடான மணற்பரப்பு என்பதாலும், மரங்கள் அடர்ந்து செறிந்த சோலையாக இல்லாததாலும், குளிர்ந்த பயிர் பச்சைகள் விளைவதற்குரிய சுத்தமான தண்ணீர் இல்லாததாலும் அவ்வாறு அது திகழ்கின்றது.

இந்தப் பாட்டில், அந்த நிலம் பயிர் பச்சைகள் விளைவதற்குரிய பக்குவம் பெறவில்லை என்பதை மிக நேர்த்தியாக விளக்கப்படுகிறது.

காரண்ங்களை வரிசை வரிசையாக அடுக்கிக் கூறுவது அழகினும் அழகு.

நம் பகுதிகளில் காலம் நேரம் பார்த்து பருவத்தே பயிர் செய்வோம். ஆனால் அப்படிச் செய்ய வாய்ப்பில்லாததால் அந்நிலம் பருவமடையாப் பெண்போல விளைக்கத் தகுதியற்றதாக உள்ளது.

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## மூன்றாம் பிரசங்கம்

### சந்தைகள்

அறபிகள் மாதந்தோறும் சந்தைகள் கூட்டி வியாபாரம் செய்தனர். கவிதை, மொழி வமிசச் சிறப்பு, பேச்சுத்திறமை, முதலானவைகளிற் போட்டியிட்டனர். பிரபந்தங்களும் எழுதிப் பெருமை கொள்வாராயினர். இதனால் மொழி, மதம், குணம் முதலாமிவைகளிடத்தே ஒற்றுமையும் நிலவியது. பிரசங்கிகள், புலவர்கள் முதலானோர் பொதுமக்கள் உபயோகிக்கும் சொற்களை விரும்பிச் செவிகளுக்கு இன்பமூட்டும் வகையில் உபயோகித்துத் தங்கள் இலக்கியப் போக்கையும் சிந்தனையையும் எங்கும் பிரபலமடையச் செய்தனர். இவற்றில் உக்காள், (عكاظ) மஜன்னா , (مَجَنَّة) துல்மஜாஸ், (ذُو المجاز) ஆதியாம் சந்தைகள் பிரபலமான வைகள். இவைகளிடையே பிரபல அறிஞர்களும் கூடி வியாபாரம் செய்ததோடு இலக்கிய வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் ஏற்படுத்தினர்.

### இலக்கியத்தில் மககாவின் ஈடுபாடும் குறைஷிகளின் செயற்பாடும்.

அறபிகளின் எழுச்சியிலும் மொழியின் தத்துவத்திலும் மக்காவுக்கு அதிக ஈடுபாடுகளுண்டு. கி.பி ஆறாம் நூற்றாண்டில் இறுதிப் பகுதியில் மக்கா, தெற்கே இந்தியா, யமன் முதலாம் நாடுகளில் இருந்து வரும்வியாபாரச் சரக்குகளை வாங்கும் கேந்திரத் தலமாயிருந்தது.

வடக்கே சீரியா, மேற்கே எகிப்து முதலாம் நாடுகளுக்கு மக்காவாசிகள் இவற்றை எடுத்துச் சென்று விற்றுப் பண்டமாற்றுச் செய்து வந்தனர். இதனால் அறிவு அபிவிருத்தியும் விளக்கத்தில் வல்லமையும் பொருள் வளர்ச்சியும் வாழ்க்கை முறைகளில் தேர்ச்சியும் பெற்று வந்தனர். குரைஷ்களான மக்கீகளின் அறிவு, நாகரிகம் தகைமை முதலியன இவ்வழிகளில் மேன்மையடைந்து வந்தமையால் மற்றேனை மொழிகளை விடத் தங்கள் மொழியினை நாகரிகப்படுத்தினர். புலவர்களும் இதைப் பிரசாரம் செய்து பிரசித்திப் படுத்தினர். பரிசுத்த குர்ஆன் இறங்கி அம்மொழியைச் சம்பூரணப்படுத்தி எங்கும் அம்மொழியின் புகழ் பரவச் செய்தது.

## உரைநடை

பரிமாற்றம் இலகுவாதலாலும் கட்டுப்பாடு இல்லாததாலும் அதன் பிரயோகம் அவசியமானதாலும் உரைநடை, மொழி வகைகளில் முதன்மை வாய்ந்ததா யிற்று. இஃது உரைநடை யெனவும் உரைநடைச் செய்யுள் எனவும் இருவகைப்படும். எழுத்தாளர்கள், மொழித்தேர்ச்சியும் அருந்திறமையும் வாய்ந்தவையுமான கீழ்வரும் ஐந்து அமிசங்களையும் தேர்ந்து கொண்டனர். அவை 1. அம்தால்- உவமைகள் (امثال) 2. ஹிகம் (حكم) அறிவுத்துணுக்குகள் 3. வஸாயா - (وصايا) உபதேசங்கள் 4. குதப்- (خُطب) பிரசங்கங்கள் 5. வஸ்பு- (وصف) வருணனை என்பன.

## உவமைகள்

ஒன்றினுக்கொன்றை ஒப்பாக்கிக் காட்டுவதையே உவமையெனக் கூறுவர். உ+ம்: (واقف شَنٌّ طَبَقَةَ) சன்னு, (எனும் ஆண்), தபகா (எனும் பெண்ணை) ஒத்தான். இவ்வாறு, இருவரும் எல்லா அமிசங்களிலும் ஒற்றுமையாக விருந்தமையால் உவமை இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இத்தகைய உவமைகள் பல சேர்த்து அறிஞர்கள் அநேக நூல்களை எழுதியுள்ளனர்.

## அறிவுத் துணுக்குகள்

உண்மைக்கு நேரான, சிறந்த, குறையற்ற பேச்சுகளே அறிவுத் துணுக்குகள் எனப்படுவன. அவை பயன்மிக்க அனுபவமும், நுண்ணறிவுத் தெளிவும் சோதித்தறிந்த முடிவுமுடையன. (உ+ம்)

(من سَلَكَ الْجَدَدَ اَمِنَ الْعِثَار) சமபூமியில் நடந்தவன் வழுக்கி விழாமல் தப்பிக் கொண்டான்.

(عِيٌّ صَامت خير من عِيٍّ ناطق) வாய் மூடி யிருக்கும் பலவீனன் பேசும் பலவீனனை விட நல்லவன். இவை போன்றவையே அறிவுத் துணுக்குகளாவன.

(விரியும்)

---

**திருச்சி, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமியா யாஸீன் அஅறபுக் கல்லூரி மற்றும் அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை சார்பாக, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை திருவல்லிக்கேணி வட்டாரப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்களும் , உலமாப் பெருமக்களுக்கு நிதி உதவியும் வழங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.**



# சபாஷ்....சரியான பதில்....!

ஒரு முறை ஞானி இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தம் மாணாக்கர்களிடம் ஆறு கேள்விகளைக் கேட்டார்கள். மாணவர்களும் அவர்களுக்குத் தெரிந்த பதில்களைச் சொன்னார்கள். அப் பதில்களையெல்லாம் கேட்டுக்கொண்ட இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களுடைய பதில்களையும் கூறினார்கள். பக்தாதில் இருந்த உலகப்புகழ்பெற்ற நிஜாமியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தவர்கள் இமாம் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்கு பதிலாக ஒரு புத்தகமே பதலாக எழுதிக்கொடுப்பார்களாம்.

**கேள்விகளும் பதில்களும்**

1. இவ்வுலகில் நமக்கு மிகவும் நெருக்கமானது எது?

பெற்றோர், மனைவி, கணவன், நண்பர்கள், குழந்தைகள் என பல பதில்களை மாணவர்கள் கூறினார்கள்.

இமாம் அவர்களின் பதில்:

உங்கள் பதில்களெல்லாம் சரிதான் என்றாலும் மிகச்சரியான பதிலல்ல. மிகச்சரியான பதில் இறப்பு என்பதுதான். ஏனெனில் உயிர் வாழ்பவர்கள் அனைவரும் நிச்சயம் ஒருநாள் இறந்து போவார்கள் என்று அல்லாஹ் குர்ஆன் ஷரீபில் கூறியுள்ளான் (சூரா ஆல இம்ரான் 185).

2. இந்த உலகில் நம்மிடமிருந்து மிகத் தூரத்தில் இருப்பது எது?

சீன தேசம், சந்திரன், சூரியன் என பல பதில்களை மாணவர்கள் சொன்னார்கள்.

அவைகளெல்லாம் சரிதான். என்றாலும் மிகச்சரியான பதிலல்ல. மிகச்சரியான பதில் நமது கடந்த காலம்தான். ஏனெனில் நாம் யாராக இருந்தாலும், என்னதான் செய்தாலும், நம் கடந்த காலத்துக்கு மீண்டும் நம்மால் செல்லவே முடியாது. எனவே இன்றைய நாளைப் பற்றித்தான் நாம் கவனம் கொள்ளவேண்டும். அவைகளை இஸ்லாம் கூறியுள்ளபடி நல்ல செயல்களால் நிரப்ப வேண்டும்.

3. இவ்வுலகில் மிகப்பெரியது எது?

மலை, பூமி, சூரியன் என இக்கேள்விக்கும் பல பதில்களை மாணவர்கள் சொன்னார்கள். அந்த பதில்களெல்லாம் சரிதான் என்றாலும் மிகச்சரியான பதில் நமக்கு வரும் நஃப்ஸ் எனப்படும் சலனங்கள்தான். எனவே அதன்மீது நாம் மிகவும்

பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். (சூரா அஃராஃப், 179)

4. இவ்வுலகில் மிகவும் கனமானது எது?

இந்தக் கேள்விக்கும் இரும்பு, யானை என பல பதில்களை மாணவர்கள் சொன்னார்கள். இந்த பதில்களெல்லாம் சரிதான். ஆனால் மிகச்சரியான பதில் நம்பகத்தன்மையுடன் நடந்துகொள்வதுதான்.

நம்மிடம் கொடுத்து வைக்கப்பட்ட அமானிதத்துக்கு துரோகம் செய்யாமல் நடந்துகொள்வதுதான். தாவரங்கள், மரங்கள், மிருகங்கள், மலைகள் எல்லாம் இவ்வுலகின் கலீஃபாவாக தாம் இருக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தன. ஆனால் ஆணவத்தின் பொருட்டு மனிதன் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். அப்பொறுப்பை நிறைவேற்றாத பலர் அல்லாஹ்வால் நரகில் வீழ்த்தப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் மீது அடுத்தவர் கொண்டிருந்த நம்பகத்தன்மைக்குப் புறம்பாக அவர்கள் நடந்துகொண்டார்கள். (சூரா அஹ்ஸாப், 72)

5. உலகிலேயே மிகவும் இலேசானது எது?

பஞ்சு, தூசி, காற்று என பல பதில்களை மாணவர்கள் கூறினார்கள்.

அப்பதில்களெல்லாம் சரிதான் என்றாலும் மிகச்சரியல்ல. மிகச்சரியான பதில் தினசரித் தொழுகைளை விட்டுவிடுவதுதான். உடல் நிலை, வாணிகம் என பல காரணங்களைக் காட்டி மனிதர்கள் தொழுகையைத் தவறவிட்டுவிடுகிறார்கள்.

6. உலகிலேயே மிகவும் கூர்மையானது எது?

வாள், கத்தி என பல பதில்களை மாணவர்கள் கூறினார்கள். அவையெல்லாம் சரிதான் என்றாலும் மிகச்சரியல்ல. மிகச்சரியான பதில் மனித நாக்குதான்.

திமிர்த்தனமான, அகம்பாவம் பிடித்த பேச்சு அடுத்தவரின் உணர்வுகளைக் காயப்படுத்தும். அதுதான் உலகிலேயே மிகவும் கூர்மையான ஆயுதம் என்று சொன்னார்கள்.

இதயத்தின் உயிரானது அறிவுதான். அதைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளுங்கள். இதயத்தின் இறப்பானது அறியமையாகும். எனவே அதிலிருந்து விடுபடுங்கள்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகச்சிறந்த உணவு உண்மையான பக்திதான். எனவே அந்த உணவையே உண்ணுங்கள், கொடுங்கள். இந்த ஆலோசனை போதும். இதைப்புரிந்துகொண்டு செயல்படுங்கள் என்று கூறி முடித்தார்கள்... ஸுப்ஹானல்லாஹ்..

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

வெலிகமவில்

# வாரிஸ் அலி மௌலானாவுக்கு சேவை நலன் பாராட்டு விழா



(வெலிகம தினகரன் நிருபர்)

அதிபர் சேவையில் வரலாறு படைத்த அறபா தேசிய பாடசாலையின் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் ஜமாலிய்யா ஸெய்யித் வாரிஸ் அலி மௌலானாவின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் நூல் வெளியீட்டு வைபவமும் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் வெலிகம அறபா தேசிய பாடசாலை முற்ற வெளியில் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில், அவரிடம் படித்த நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பிக்க வருகை தரவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

---

**வெ**லிகமாவில் அதிபர் சேவையில் முத்திரை பதித்து பல்லாயிரக்கணக்காண மாணவர்களை அறிஞர்களாக ஆக்கிய பேரறிஞர் ஓய்வுபெற்ற அதிபர், ஜமாலிய்யா ஸெய்யித் வாரிஸ் அலி மவுலானா அவர்களுக்கு சேவைநலன் பாராட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. மௌலானா அவர்களை மெச்சி துபை என்ஜீனியரிங் மானேஜ்மென்ட் சொஸைட்டி சார்பாக அதன் நிர்வாகியும் அறிவியல் அறிஞருமாகிய கலீபா முனைவர் எம். ஜே. இக்பால் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார். பேராசிரியர் அதிபர் வாரிஸ் அலி மௌலானா அவர்களின் ஒப்பற்ற தியாகம், ஈடுபாடு, நாற்பது ஆண்டுகளுக்கு மேலான பணி இவை எல்லாம் அவர்கள் வாழ்வில் முத்திரைப் பதிப்புகள். மாணாக்கர்களின் திறன்களுக்கு உத்வேகம், ஊக்கம் தருவது, தங்களின் அனுபவங்களை அழகாகப் பகிர்வது, நேரடிக் கலந்துரையாடல், அழகான தெளிவான தொடர்பு, மாணக்கர்களின் தனித்திறமை அறிந்து அதை வெளிக்கொணர்வது, இதனால் அவரிடம் பயின்ற பல ஆயிரம் மாணவர்கள் இலங்கை மட்டுமின்றி உலகளவில் பிரகாசிக்கிறார்கள். நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவரிடம் இருந்தால் அவரது சொல்லிலும் செயலிலும் எவ்விதக் கோணலுமின்றி மேன்மையே இருக்கும் என்ற திருவள்ளுவரின் சொற்கோட்டம் இல்லாது செப்பம் ஒரு தலையா, உட்கோட்டம் இன்மை பெறின் என்ற குறளுக்கு உதாரண புருஷராக வாரிஸ் அலி மௌலானா அவர்கள் இருந்து, மாணவர்கள் மட்டுமின்றி ஆசிரியர்களின் பேராசானாகத் திகழ்கிறார்கள். வாரிஸ் அலி மவுலானா அவர்களின் திட்டமிடல், தீட்சணயம், ஆள்வினை, ஆன்ற அறிவு. ஒழுங்கு முறை, நேரம் தவறாமை, சுத்தம், பசுமைப் புரட்சிக்கு ஊக்குவித்தல் இவை எல்லாம் குறிப்பிடத்தக்கவை என இக்பால் கூறுகிறார். இவர்கள் சங்கைக்குரிய இமாம் அஷ்ஷைகு ஜமாலிய்யா செய்யது கலீல் அவுன் மவுலானா அல் ஹாஷிமிய் அல் ஹஸனி ஹுசைனி நாயகம் அவர்களின் மருமகர் என்பதும், இவர்களிடம் ஆன்மிக, ஏகத்துவக் கல்விகளைக் கற்றார்கள் என்பதும் கூடுதல் முக்கியச்செய்தி என எம்.ஜே.எம். இக்பால் தமது செய்தியில் கூறியுள்ளார். அதிபர் அவர்கள் நீடு வாழ்க! சேவைகள் தொடர்க! நெடும் புகழ் நிலைக்க வாழ்க வாழ்கவே!

# இஸ்லாம் போராளிகள் மதமா?

(கட்டுரையாசிரியர் – ப.சிதம்பரம் (மத்திய மேனாள் உள்துறை அமைச்சர்)

கிறிஸ்துவப் பள்ளிக் கூடங்களில் படிக்கும் வாய்ப்பு எனக்கு இளமையில் கிட்டியது. முதலில் ரோமன் கத்தோலிக்க கன்யாஸ்திரீகள் நடத்திய கான்வென்ட், அடுத்து பிராடஸ்டண்ட் மிஷன் நடத்திய உயர்நிலைப்பள்ளி , எல்லா வகுப்புகளிலும் இந்து சமயத்தைச் சார்ந்த மாணவர்களே (கான்வென்டில் மாணவிகளும் மிக அதிகமாக இருந்தார்கள். சில கிறிஸ்தவர்கள். அபூர்வமாக சில முஸ்லிம்கள். ஆனால், ஒரு முக்கியமான விஷயம் இந்து, கிறிஸ்துவர், இஸ்லாமியர் என்று பொதுவாகத் தெரிந்தாலும் மதத்தின் அடிப்படையில் மாணவர்கள் மத்தியில் எந்த வேறுபாடும் கிடையாது. பல நேரங்களில் ஒரு மாணவனின் பெயரைக் கொண்டுதான் அவனுடைய மதம் தெரிந்தது. நடை, உடை, உணவுப் பழக்க வழக்கங்களில் எந்த வேறுபாடும் தெரியவில்லை. எல்லோரும் காமிக்ஸ் படித்தார்கள். எல்லோரும் கிரிக்கெட் பைத்தியமாக இருந்தார்கள். நான் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த காலத்தில் மதம் ஒரு முக்கியக் குறியீடாகக் கருதப்படவில்லை. ஒவ்வொரு மாணவனும் பைபிள் அல்லது அறநெறிப் பாடத்தைப் படிக்க வேண்டும் என்பது பள்ளியின் விதி. மிகப் பெரும்பான்மையான மாணவர்கள் (அவர்களில் பெரும்பாலோர் இந்துக்கள்) அவர்களுடைய பெற்றோரின் சம்மதத்துடன் பைபிள் பாடத்தையே விரும்பித் தேர்ந்தெடுத்தார்கள். அநேகமாக எல்லா முஸ்லிம் மாணவர்களும் பைபிள் வகுப்பிலேயே சேர்ந்தார்கள். யாரும் யாரையும் கட்டாயமாகவோ அல்லது நைச்சியமாகப் பேசியோ மதமாற்றம் செய்ய முற்படவில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு மாணவர் தலைவர் என்று மாணவர்களே தேர்நதெடுக்க வேண்டும். ஆறாவது வகுப்பில் (அப்போழுது முதல் பாரம் என்று அழைத்தார்கள்) நாங்கள் தேர்ந்தெடுத்த மாணவர் தலைவரின் பெயர் ஏ.கே. மூஸா. பள்ளியோ கிறிஸ்துவர்கள் நடத்தும் பள்ளி. பல ஆசிரியர்கள் கிறிஸ்துவர்களே. பெரும்பான்மையான மாணவர்களோ இந்துக்கள். ஆனால், எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஓர் இஸ்லாமியர். அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏழாம், எட்டாம். ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளிலும் எங்கள் வகுப்புத் தலைவராக

அதே ஏ.கே. மூஸா என்ற மாணவரையே தேர்ந்தடுத்தோம். ஏ.கே. முஸா எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார். ஆனால், சராசரி மாணவர். சராசரி உயரம். சராசரி கவர்ச்சி. பதினோராம் வகுப்புக்கு வந்தோம். அதுவே பள்ளியில் இறுதி வகுப்பு. ஆண்டு முடிவில் எஸ்.எஸ். எல்.சி தேர்வு எழுத வேண்டும் பதினோராம் வகுப்பின் மாணவர் தலைவரே பள்ளியின் மாணவர் தலைவர் ஆவார். பள்ளி ஆண்டு விழா மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் அவருக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. அப்பொழுது பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.குரிவல்லா ஜேக்கப் அவர்கள், பள்ளி மாணவர் தலைவர் உயரமாக, கம்பீரமாக, கவர்ச்சியாக நன்றாகப் பேசக்கூடியவராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இவருடைய விருப்பத்திற்கேற்ப பதினோராம் வகுப்பு மற்றும் பள்ளியின் மாணவர் தலைவராக நாங்கள் ஒரு கவர்ச்சிகரமான மாணவரைத் தேர்ந்து எடுத்தோம். அவருடைய பெயர் ஹாரூன் முஹம்மது.

பள்ளி வாழ்க்கை முடிந்த பிறகு ஏ.கே. மூஸாவுடன் தொடர்பு அறுந்து விட்டது. அவர் எங்கே, எப்படி, என்ன செய்து கொண்டிருந்தார். செய்து கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஹாரூண் முஹம்மது ஆஸ்திரேலியா நாட்டில் குடியேறி குடியுரிமையும் பெற்றார். 1998 ஆம் ஆண்டு அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் நான் ஆஸ்திரேலியாவில் சந்தித்தேன். கான்வென்டில் படிக்கும்போது மல்லிகா என்றொரு மாணவி இருந்தார் பெயர் மல்லிகா என்றாலும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். மிக அழகான, மிக புத்திசாலியான பெண். வகுப்பில் அந்தப் பெண்ணுடன் தான் முதலிடத்திற்குப் போட்டி.

இஸ்லாமியச் சட்டம், மதம், வாழ்க்கைமுறை ஆகியவற்றுடன் சட்டக் கல்லூரியில் படிக்கும்போது தான் அறிமுகம் ஏற்பட்டது. இந்து சட்டங்கள் என்றொரு பாடம் இருந்தது. அதைப் போலவே இஸ்லாமிய வாழ்க்கை முறை பற்றி பல மாயைத் தோற்றங்கள் இருந்தன. இந்து சமுதாயத்தின் மத்தியில் அறியாமையே இருந்தது. இஸ்லாமியச் சட்டங்களைப் படித்த பிறகு தான் அந்த அறியாமை விலகியது. இஸ்லாம் ஓர் உயர்ந்த வாழ்க்கை முறை என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்து திருமணச்சட்டங்கள், இந்து வாரிசுரிமைச் சட்டங்கள் ஆகியற்றிலிருந்து இஸ்லாமியச் சட்டங்கள் வேறுபடுகின்றன என்பது உண்மையே. ஆனால், இந்த வேறுபாடுகளின் காரணமாக மட்டுமே இந்துச் சட்டங்கள் தரம் உயர்ந்தவை என்றோ, இஸ்லாமியச் சட்டங்கள் தரம் குறைந்தவை என்றோ முடிவுக்கு வர முடியாது.

இந்துச் சட்டங்களை இறைவனே அருளினார் என்று வேதங்களும் உபநிஷத்துக்களும் குறிப்பிடுவதைப்போல இஸ்லாமியச் சட்டங்களை இறைவன்

தம்முடைய தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூலம் அருளினான் என்று இஸ்லாமியர் நம்புகிறார்கள். இஸ்லாமிய வாழ்க்கை முறயிலும் இஸ்லாமியச் சட்டங்களிலும் பல அம்சங்கள் என்னைக் கவர்ந்துள்ளன.

மனித உரிமைகளைப் பற்றி இஸ்லாமிய பிரகடன் என்றொரு பிரகடனத்தை 1981 ஆம் ஆண்டில் இஸ்லாமியர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.. மதத்தில் கட்டாயம் கிடையாது என்பது முக்கியமான கொள்கை. முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்ற சிறுபான்மை சமயத்தினர் அவர்களுடைய மதம் வகுத்துள்ள சட்ட விதிகளைப் பின் பற்றி வாழ உரிமை உண்டு என்று பிரகடன் அறிவிக்கிறது. ஒருவருடைய மத நம்பிக்கையில் அவரை யாரும் கட்டாயப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ கூடாது என்பது திருக்குர்ஆனின் அடிப்படைக் கொள்கை.

பெண்களுக்கும் சொத்துரிமை இல்லாத காலத்தில் தோன்றியது இஸ்லாம். பெண்கள் தங்கள் பெயரில் தனிப்பட்ட முறையில் சொத்து வைத்துக்கொள்ளும் உரிமையை இஸ்லாம் அறிவிக்கிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) ஒரு மாமனிதர். அவரைக் குறித்து, "சண்டையும் சச்சரவும் நிறைந்த குலம் கோத்திரங்களையும், நாடோடிகளையும் தமது தனி முயற்சியால் இணைத்து, ஒரு இருபது ஆண்டுகளுக்குள்ளேயே நாகரிகம் மிகுந்த பலம் பொருந்திய சமுகமாக எவ்வாறுதான் அவரால் உருவாக்க முடிந்ததோ" என்று வரலாற்று ஆசிரியர் தாமஸ் கார்லைல் வியந்து எழுதினார்.

தம்முடைய "யங் இந்தியா" பத்திரிகைகளில் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உயர் பண்புகளைக் குறித்து மகாத்மா காந்தி எழுதியதைப் பாருங்கள். "இஸ்லாத்திற்கு அக்காலத்திய வாழ்க்கையமைப்பில் உயர்ந்த ஓர் இடத்தைப் பெற்றுத் தந்தது வாள் பலமல்ல, என்று முன் எப்போதையும் விட அதிகமாக நான் உணர்ந்தேன். நபிகள் நாயகத்தின் மாறாத எளிமை, தம்மைப் பெரிதாகக் கருதாமல் சாதாரணமானவராக நடந்தது கொள்ளும் உயர் பண்பு, எந்நிலையிலும் வாக்குறுதியைப் பேணிக்காத்த தன்மை, தம் தோழர்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பு, அவரது அஞ்சாமை, இறைவன் மீதும் தமது பிரசாரப் பணியிலும் அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கை ஆகியவை தாம் அவரது வெற்றிக்குக் காரணங்கள்."

இஸ்லாம் ஒரு போராளிகளின் மதம் என்றொரு தோற்றம் இருக்கிறது. வாள் பலம் கொண்டே இஸ்லாம் பரவியது என்றும் வாள் பலத்தைக் கொண்டு இஸ்லாமியர் மற்றவர்களை அச்சுறுத்துகிறார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இஸ்லாமிய இயக்கம் ஒரு பெரும் பேராட்டத்திற்குப் பிறகே முன்னேறியது என்பதைக்

கவனத்தில் கொள்ள வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியை இஸ்லாம் அழைப்புப் பணி என குறிப்பிடுகிறது. இந்த அழைப்புப் பணியை இரண்டு கால கட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் காலகட்டம் மக்கா நகரில் நடந்த சகாப்தம். இது 13 ஆண்டுகள் நீடித்தது. இரண்டாவது கால கட்டம் மதனீ சகாப்தம். இது 10 ஆண்டுகள் நீடித்தது. மக்கீ சகாப்தத்தில் நபிகள் நாயத்தின் மீதும் அவருடைய அழைப்புப் பணியின் மீதும் சொல்லொணாத கொடுமைகளும், அக்கிரமங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. அன்றைய அதிகாரவர்க்கத்தினர் நபிகள் நாயகத்தை பைத்தியக்காரர் என்று பழித்தார்கள். அவருடைய பேச்சைக் கேட்க யாரும் போகக் கூடாது என்று தடை விதித்தார்கள். முஸ்லிம்களைக் கண்ட போது அவர்களைத் திட்டினார்கள். வசை பாடினார்கள். ஆயினும் இஸ்லாமிய அழைப்பின்பால் மக்கள் கவனம் திரும்பி ஏராளமானவர்கள் திரண்டார்கள். தன்னுடைய இறுதி ஆயுதமாக வன்முறையை அதிகார வர்க்கம் ஏவி விட்டது. முஸ்லிம்கள் மீது இழைக்கப்பட்ட துன்பங்கள் அவர்களால் தாங்க முடியாத அளவிற்குச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்த பிறகு, மக்கா நகரிலிருந்து வெளியேறுவது என்று நபிகள் நாயகம் முடிவெடுத்தார். மக்கீ சகாப்தம் ஒரு பெரும் போராட்ட காலமாக இருந்தது. பிறகு தொடங்கியதே மதனீ சகாப்தம்.

தம்மையும் தம்முடைய மதத்தையும் தற்காத்துக் கெள்ளவே முஸ்லிம்கள் போராட்டக் குணத்தை வளர்த்துக் கெள்ள வேண்டியிருந்தது. அரசியல் மற்றும் காழ்ப்பு உணர்வுகளின் காரணமாகவே இஸ்லாத்திற்கு எதிராக அவதூறு பிரச்சாரம் நடந்தது என்பதே உண்மை. பேராசிரியர் பெவான் என்னும் வலாற்று நூலாசிரியர், முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பற்றியும் இஸ்லாம் பற்றியும் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்டவையெல்லாம் இலக்கிய விந்தைகளாகி விட்டன என்று குறிப்பிடுகிறார்.

இஸ்லாம் ஏகத்துவம், மறுமை ஆகிய கோட்பாடுகளை வலியுறுத்துகிறது. ஒரே இறைவன் என்பது மூலக்கோட்படு. அவனை ஒத்ததோ, விஞ்சியதோ ஏதுமில்லை. அவன் அதிபதி, அவனிடம் எந்தக் குற்றமும், குறையும் காண முடியது. அவன் உடல்களை உருவாக்கியவன். ஆன்மாவை உண்டாக்கியவன். அவனே இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி. இதுவே ஏகத்துவம்.

---

படுக்கையிருந்தெழுந்து பள்ளி செல்ல மனமில்லை
படைத்தவனை வணங்க உணர்வில்லையே –நீ
கபுரிலிருந்து நேரே கண்ணைத்திறந்து நேரே
சொர்க்கத்துக்குச் செல்ல மிக ஆசை வைக்கிறாய்!

–அல்லாமா மகாகவி இக்பால் –

# திருமணத்துக்கு முந்தைய கவுன்சிலிங்....

(பி.எம். ஜியாவுத்தீன் பாக்கவி. முதல்வர். அரபிக்கல்லூரி அய்யம்பேட்டை)

இன்றைய நவீன உலகில் விரும்பியோ விரும்பாமலோ இயந்திரத்தனமான வாழ்வை மக்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அதனால் திருமணத்தையும், குடும்ப வாழ்வையும் ஒரு சுமையாகவே கருதத் துவங்கிவிட்டனர். திருமணமின்றி தனித்து வாழ்வதையோ அல்லது திருமணப் பதிவு இன்றி ஆண் – பெண் சேர்ந்து வாழ்வதையோ விரும்புகின்றனர்

இதன் மூலம் திருமணத்தால் ஏற்படும் உறவு பந்தங்கள் என்ற கட்டுப்பாடுகளை உடைத்தெறியவும் அதன் மூலம் கிடைக்கும் பிள்ளைப் பேற்றினை தவிர்க்கவும் தயாராகிவிட்டனர். எனவே திருமணம் நிச்சயிக்கப்பட்ட மணமக்களை, அழைத்து, சுமார் இரண்டு மூன்று தினமாவது கவ்ன்சிலிங் கொடுப்பது காலத்தின் கட்டாயம். இது பல நாடுகளில் நடைமுறையிலும் உள்ளது. இதற்கு சம்மந்தப்பட்ட இருவீட்டாரும் இருஊர் ஜமாத்துகளும் ஒத்துழைக்கவேண்டும்.

இஸ்லாமிய மஹல்லாக்களில் இத்தகைய கவுன்சிலிங் குழுக்கள் அமைக்கப்படும் போது அதில் ஆலிம் ஒருவர், ஒரு வழக்கறிஞர், ஊர் நிர்வாகிகள், இருப்பது நன்று, இதற்கு மேடைகள் அமைத்து சொற்பொழிவு நிகழ்த்துவது போலில்லாமல் ஒரு கலந்துரையாடலாக நடத்த வேண்டும்.

முதலில் திருமணத்தின் நோக்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் புரியவைக்க வேண்டும்

1. திருமணமின்றி வாழ்வு நிறைவடையாது.

2. திருமணம் நமது வாழ்வின் சரிபாதியைக் கடப்பதற்கு உதவும். பருவமடைந்தவர்களுக்கு உரிய காலத்தில் வடிகாலை ஏற்படுத்தித் தராவிட்டால் அது பல்வேறு தவறான பாதைகளுக்கு இட்டுச்செல்லும். திருமணம் என்று வரும்போது எல்லோருக்கும் ஏற்படும் பிரச்சனைக்கு திருக்குர்ஆன் இவ்வாறு தீர்வு சொல்கிறது. *நீங்கள் திருமணம் செய்து வையுங்கள் அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தனது அருளால் செல்வந்தராக்கி வைப்பான் (24-32)*

*நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: பத்தினித்தனமாக கற்பொழுக்கத்தோடு வாழவேண்டுமென்ற நோக்கத்தில் திருமணம் செய்துகொள்பவருக்கு உதவுவது அல்லாஹ்வுக்கு கடமையாகிறது (அறிவிப்பு அபூ ஹூரைரா -ரலி- திர்மிதி - 1655)*

திருமணம் என்பது, தனது பாலியல் உணர்வுகளுக்கு வடிகாலாக ஏற்படுத்தப் பட்ட ஒரு சடங்கு என இன்றைய உலகம் கருதுகிறது. அவ்வாறல்ல, அது ஒரு கவுரவமான வாழ்க்கை ஒப்பந்தம் அதனால்தான்,

மணமக்களின் மணப்பூர்வ சம்மதம்,

இருவீட்டார் ஒப்புதல் – இரு தரப்பு சாட்சிகள் – ஜமாத்தார்களின் முன்னிலை,

மஹர் மணக்கொடை செலுத்துதல்,

ஆகிய நடைமுறைகள் கடைபிடிக்கப் படுகின்றன. இதிலிருந்தே இது பொழுது போக்கு விஷயமல்ல எனப் புரிந்து கொள்ளலாம். திருமணத்திற்கான முதல் காரணம் தனிமனித கற்பொழுக்கம். நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: இளைய சமுதாயமே! உங்களில் தாம்பத்திய வாழ்வுக்கு சக்தி பெற்றவர்கள் மணமுடித்தக் கொள்ளட்டும். ஏனெனில் அது தகாத பார்வையைக் கட்டுப்படுத்தும். கற்பொழுக்கத்தைப் பாதுகாக்கும். அதற்கு இயலாதவர்கள் நோன்பு நோற்கட்டும் ஏனெனில் நோன்பு (மனஇச்சையை) கட்டுப்படுத்தக் கூடியதாகும் (நூல் புகாரி – 1905)

இரண்டாவது, சமூகக் காரணங்களுக்காக மண முடிப்பதாகும். உலகம் உள்ளவரை மனித சமுதாயத்தின் சங்கிலித்தொடர் தொய்வின்றி நீடிக்கவேண்டும் என்பது இறை நியதி. நமது முன்னோர்கள் இவ்வாறு திருமணம் முடிக்கமால் இருந்திருந்தால் நாம் பிறந்திருக்கவே மாட்டோம். இதை திருக்குர் ஆன் இவ்வாறு கூறுகிறது.

*மனிதர்களே! உங்கள் இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன்தான் உங்களை ஒரே உயிரிலிருந்து படைத்தான். அதிலிருந்தே அதன் துணையையும் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான் (04-01)*

திருமணம் எனது வழிமுறை அதைப் புறக்கணித்தவர் என்னைச் சார்ந்தவரல்ல என்றும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (நூல் புகாரி – 5063)

**காதல் திருமணம்...**

இது இவ்வாறு இருக்க, பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை விடக் காதல் திருமணங்களே அதிகம் நடைபெறுகின்றன. உலகிலுள்ள ஏதேனும் தனக்கு

பிடித்தமான பொருளை விரும்புவதைப் போன்றுதான் ஆண் – பெண் ஒருவரை யொருவர் விரும்புவதும்.

மோகம் 30 நாள், ஆசை அறுபதுநாள் என்பர். ஆழம் தெரியாமல் காலை விடுவதற்குப் பெயர்தான் காதல் எனப்படும். கொஞ்சநாள் பெண் தோழியுடன் ஊர் சுற்றுவதால், அலுவலகங்களில் உடன் சேர்ந்து பணியாற்றுவதால் ஒரு பெண்ணை முழுமையாக அளந்து பார்க்க முடியாது. 30 வருடங்கள் குடும்பம் நடத்தியவர்களே அவளை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்காகத்தான் காதலிக்கிறோம் என்பது நெண்டிசாக்காகும்.

இதுபோன்ற காரணங்களை சொல்லிக்கொண்டு இருவரும் ஒன்றாகத் தனிமையில் தங்குவது, கை கொடுப்பது, கட்டித்தழுவுது, முத்தங்களை பறிமாறிக் கொள்வது, வீடியோ காலில் உரையாடுவது போன்றவை ஹார்மோன்களின் உந்துதலால் ஏற்படும் பருவக் கோளாறாகும்.

இவ்வாறு ஏற்படும் காதல் தோல்வியடைந்து விட்டால் அது தற்கொலையில் கொண்டு போய் சேர்த்துவிடுகிறது. காரணம் ஆணோ, பெண்ணோ தாங்கள் தேர்ந்தெடுத்தது சரியில்லை என உணருகிற தருணம். அப்போது அவர்கள் எடுத்து வைத்த போட்டோக்கள் ஒருவரை யொருவர் பழிவாங்குவதற்கே பயன்படுகிறது. அதனால்தான் தகாத உறவின் தலைவாசலையே அடைக்கச் சொல்கிறது இஸ்லாம்.

*நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: கண்கள் செய்யும் விபச்சாரம் தவறான பார்வை. காதுகள் செய்யும் விபச்சாரம் ஆபாச பேச்சுகளை கேட்பது (நூல் முஸ்லிம் 5165)*

*விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்கள் என திருக்குர்ஆன் கூறுகிறது (05-32)*

இஸ்லாத்தில் கற்பொழுக்கங்கள் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சேர்ந்தே சொல்லப்பட்டுள்ளது அதேசமயம் பெண்ணைப் பார்த்துவிட்டு மண முடிப்பதையும் மார்க்கம் தடைசெய்ய வில்லை. முகீரா பின் ஷிஃபா (ரலி) என்பவர் கூறுகிறார்கள். நான் ஒரு பெண்ணை பெண் பேசினேன். அதை அறிந்து கொண்ட நபி (ஸல்) அவர்கள், அந்தப் பெண்ணை நேரில் பார்த்துக் கொள். ஏனெனில் அது உங்கள் இருவரிடையே அன்பை ஏற்படுத்தும் என்றார்கள் (நூல் திர்மிதி 1007).

எனவே இறையச்சத்தோடு இதை அணுக வேண்டும், பெண்ணைப் பார்த்த பின் வெளியில் வந்து குறை சொல்லக்கூடாது. அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

# சர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் (ரஹ்)

கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கியுல் காதிரிய். திருச்சி

ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்கள், தாங்கள் மறைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே தங்களின் சீடர்களுக்கு தங்களின் மறைவுச் செய்தி பற்றி சாடையாகக் கூறிவந்தார்கள். தாங்கள் மறைவதற்கு இருபத்து நான்கு நாட்களுக்கு முன்னர் அவர்கள் கூத்தாநல்லூரில் ஒரு பிரபல ஆலிமின் அடக்கச் சடங்கிற்கும் போயிருந்தார்கள். அப்போது அவர்கள், மார்க்கத்தின் பெரும் சேவை செய்த நல்லோர்களெல்லாம் இவ்வாண்டு மறைந்து விட்டார்கள் நானும் நல்லவனாக இருந்தால் இந்த ஆண்டே அவர்களைப் போன்று மறைந்து விட வேண்டும் என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட அருகில் இருந்த ஒருவர், ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் நீங்கள் என்ன நல்லவரா அல்லது தீயவரா? அப்படிச் சொல்லாதீர்கள் என்று கூறினார்.

அதற்கு அவர்கள், நான் நல்லவனாக இருப்பதைத் தாங்கள் விரும்ப வில்லையா? என்று வேடிக்கையாகக் கேட்டார்கள்.

அப்பெரியாரை நல்லடக்கம் செய்து விட்டு பொதக்குடி திரும்பினார்கள். அவர்கள் மௌத்தும் அவர்களைப் பின் தொடர்ந்தது. திடீரென அவர்கள் நோயுற்றார்கள். முதுகில் கட்டிகள் கிளம்பி சொல்லொண்ணாத வேதனையைத் தந்தது. இதைக் கேள்விப்பட்ட மக்கள் பல பாகங்களிலிருந்தும் வந்து கூடி விட்டார்கள். அவர்களின் நலம் விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லி விட்டுச் சென்றார்கள். கூத்தாநல்லூர் வாசிகள் சிலர் ஹள்ரத் அவர்களைக் காண வந்தவர்கள் தங்களின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். நீங்கள் கவலைப்படுவதின் நோக்கம் எனக்குப் புரிகிறது. நான் இருபது ஆண்டுகள் அரும்பாடுபட்டு சேகரம் செய்யப்பட்ட ஒரு நூலகம் போன்றிருந்தேன் அது அழியப் போகிறதே என்று அறிந்த எவருக்கும் வருத்தம் வரத்தானே செய்யும் என்று அவர்கள் கூறினார்கள்.

நாளுக்கு நாள் நோயின் கடுமை அதிகமாகிக் கொண்டே சென்றது. ஊர் மக்கள் அவர்ளை மன்னார்குடியில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் போது அவர்களின் துணைவியார் ஹலீமா அம்மையார் ஒரு கனவு கண்டார்கள். தண்ணீர் எடுத்துவர அவர்கள் ஆற்றங்கரைக்குச் செல்கிறார்கள். அங்கு பார்த்தால் ஆற்றில் திருக்குர்ஆனின் பக்கங்கள் மிதந்து செல்கின்றன. அவற்றை சேகரிக்க அம்மையார் எவ்வளவோ முயன்றும் முடியாது போய்விட்து. இவ்வாறு கனவு கண்டு திடுக்கிட்டுக் கண் விழித்தார்கள்.

அவர்கள் கனவு கண்ட சில நாட்களில் திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து அதன்படியே வாழ்ந்து வந்த நம் ஹள்ரத் அவர்களுக்கு முதுகில் உள்ள கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்ற மருத்துவர்கள் முடிவு செய்தனர். அப்படி அறுவை சிகிச்சை செய்தும் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. கண்ட பலன் அவர்களின் தூய உயிர் பிரிந்து போனதுதான். அது சயம் ஹள்ரத் அவர்கள் திக்ரும் ஸலவாத்தும் ஓதிக்கொண்டிருந்த அவர்கள் திடீரென உக்ருஜ் (வெளியேறு) என்று தம் ஆன்மாவிற்கு ஆணையிட்ட வண்ணம் அப்படியே கண்கள் மூடிவிட்டார்கள். பேரின்ப வாழ்வு வாழச் சென்றுவிட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இது நிகழ்ந்தது 1927ஆம் ஆண்டு. ஜுன் மாதம் 5 ஆம் தேதி (ஹிஜ்ரி 1345 ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் 4 ஆம் நாள்) ஞாயிற்றுக் கிழமை பகல் ஒன்றரை மணி அளவில் ஆகும். அன்னவர்களின் பொன்னுடல் பொதக்குடியில் இருந்த அவர்களின் இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பல ஊர் மக்களும் பொதக்குடியில் கூடி விட்டனர் அவர்களின் அழுகையின் கண்ணீர் தெருவில் வெள்ளமாகக் கரை புரண்டோடியது. அடுத்தநாள் காலை பதினோரு மணிக்கு அவர்களின் பூவுடல் குளிப்பாட்டப் பட்டு கஃபன் அணிவிக்கப்பட்டு பொதக்குடியின் எல்லாத் தெருக்களிலும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இறுதியாக மதரஸாவின் முன்னால் உள்ள வெளியில் ஜனாஸா தொழுகைக்காக கொண்டுவந்து வைக்கப்பட்டது.

எங்கே ஹள்ரத் அவர்களின் ஆசான்? எங்கே படேசாஹிப் ஹள்ரத் அவர்கள்? என்று நாலா புறமும் மக்கள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது ஒரு குரல் அதோ படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று முழங்கியது. ஆம். படே சாஹிப் ஹள்ரத் வந்து விட்டார்கள். வண்டியில் வந்த அவர்கள் சரேலென வண்டியிலிருந்து இறங்கி

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யாரசூலல்லாஹ்! அஸ்ஸலாத்துவஸ்ஸலாமு அலைக்க யா ஹபீபல்லாஹ்! என்று தழுதழுத்த குரலில் முழங்கிய வண்ணம் வந்து ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொண்டார்கள்.

ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் அவர்களின் பொன்னுடல் மதரஸா அன்நூருல் முஹம்மதிய்யாவின் வளாகத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. அடக்கம் செய்யப்பட்டபின் அவ்விடத்திலேயே அமர்ந்த படே சாஹிப் ஹள்ரத் அவர்கள் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொன்னார்கள். அதனை வாங்கித் தம் தலையில் ஊற்றிக் கொண்டார்கள். அதன்பின் அங்கிருந்தோரைப் பார்த்து, ஸர்தார் ஹள்ரத் அவர்கள் இதுவரை நம்மிடையே வாழ்ந்து நமக்கெல்லாம் நேர்வழி காட்டிக் கொண்டிருந்தார்கள. இப்பொழுது அவர்கள் வலீமார்கள் முன் அமர்ந்து அவர்களுக்கு அறிவுரை பகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை நன் ஹக்குல் யகீன் என்ற கண்ணால் பார்க்கறேன் என்று உருக்கமாக உரையாற்றினார்கள். அது கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் கண்ணீர் விட்டனர்.

இதன்பின் ஒருவர் ஹள்ரத் அவர்களைக் கனவில் கண்டு தங்களின் நிலை எவ்வாறுள்ளது? என்று கேட்டார். இன்னல் முத்தகீன ஃபீ ஜன்னாத்தின் வதஹர் ஃபீ மக்அதி ஸித்கின் இன்த மலீகின் முக்ததிர் (பயபக்தியுடையவர்கள் புகும் இடம் சுவனமும் அதில் உள்ள நீர்ச்சுனைகளும் இறைவனின் மெய்யான இடமுமாகும்) என்ற திருமறை வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

இந்தத் திருவசனமே அவர்களின் அடக்கஸ்தலத்தின் மீது போர்த்தப்பட்டிருக்கும் போர்வையிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இன்னொருவர் அவர்களைக் கனவில் கண்டு, தாங்கள் இறந்து விடடீர்கள் அல்லவா? என்று வினவிய பொழுது அல் ஆரிபு லா யமூத்து அன லா அமூத்து (இறைவனை அறிந்தவர்கள் இறப்பதில்லை நானும் இறக்கவில்லை) என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

அவர்கள் மறைந்தபின் ஒரு தடவை அவர்கள் பொதக்குடி ஜும்ஆப் பள்ளியில் ஜும்ஆத் தொழுகையில் சேர்ந்து தொழுது கொண்டிருப்பதை நான் பார்த்தேன் என்று ஒருவர் கூறியதாகவும் கூறப்படுகிறது.

பின்பொரு சமயம் மதரஸாவில் ஓதும் மாணவர் ஒருவருக்குக் கடுமையான இருமல் இருந்ததாகவும் ஹள்ரத் அவர்கள் கனவில் வந்து தண்ணீர் ஓதிக் கொடுக்கவும் அவர் சுகப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

# புற்று நோய்க்கு மருந்து!

**புதுச்சேரி** ஜிப்மர் புற்றுநோய் மருத்துவ ஆராய்ச்சியில் நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் செலவில் புற்றுநோயாளிகளுக்கு பசியின்மை மருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜிப்மர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய நாடு தற்போது புற்றுநோய் மற்றும் அதன் பாதிப்புகளால் பெரும் இன்னல்களைச் சந்தித்து வருகிறது. உலகளாவிய பிரச்சினையாகவும் உள்ள இவ்வியாதிக்கு கை கொடுப்பது ஆராய்ச்சிகள் மட்டுமே. புற்றுநோய் சிகிச்சையானது மூன்று சிகிச்சை முறைகளைக் கொண்டது . அவை: மருந்துகள்,அறுவை சிகிச்சை, மற்றும் கதிர் வீச்சு சிகிச்சையாகும். இவை அனைத்திலும் மருத்துவ முன்னேற்றத்துக்காக ஆராய்ச்சி செய்துவரப்படுகிறது. மற்ற உலக நாடுகளில் இந்தத் துறை சார்ந்த ஆராய்ச்சிகள் 20 -30 வருடங்களாக நடந்துவந்தாலும் இந்தியாவில் இந்த ஆராய்ச்சி மிகக்குறைவாகவே நடத்தப்படுகின்றன. பல இடங்களில் பல மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஒன்றாகக் கலந்து செய்யும் (Multicenter rescarch) ஆராய்ச்சிகளே சிகிச்சையில் மாற்றங்களைத் தரவல்லது. இதுபோன்ற ஆராய்ச்சிகளை அதிகரிப்பதால் ஆக்கப்பூர்வமான பல சிகிச்சைமுறைகளும் மருந்துகளும் கண்டுபிடிக்க உதவிடும்.

இதனைக் கருத்தில் கொண்டு பயோடெக்னாலஜி ஆராய்ச்சி உதவி மற்றும் மேம்பாட்டுக் கவுன்சில் (BIRAC) இந்திய அரசின் கீழ், அதன் முதன்மைத் திட்டமான நேசனல் பயோஃபார்மா மிஷன் மூலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மருத்துமனைகளின் பங்களிப்பைக் கோரியுள்ளது. இதன் ஒரு முயற்சியாக Network of Onology Clinical Trials Inbdia (NOCI) என்ற கூட்டமைப்பு ஜிப்மர் மருத்துவமனையைத் தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.ஆராய்ச்சி மேம்பாட்டுக்காக ரூ.9.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் 6 மருத்துவ மனைகள் பங்கேற்றுள்ளன. இக்குழு 6 விதமான புற்றுநோய்களின் விபரங்களை பல தரப்பட்ட நோயாளிகளிடமிருந்து சேகரித்து வருகிறது. மேலும் இக்குழு தங்களுடைய மருத்துவ மனைகளில் மருத்துவ ஆராய்ச்சி பரிசோதனைகளையும் தொடங்கியுள்ளது. இதன் மூலம் நோய்க்கான சுலபமான தீர்வுகளையும் மருந்து தயாரிப்புக்கான பரிந்துரைகளையும் அளிக்க ஏதுவாக அமையும்.

நாட்டு
நடப்பு



♦ தூத்துக்குடி மாவட்டம் ஏரல், சூளை வாய்க்கால் மற்றும் சிறீ வைகுண்டம் வட்டாரத்தின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளை ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவர் வழிகாட்டுதலில் கண்ணியமிகு மேலப்பாளையம் உலமாக்கள் இல்யாஸ் ஆலிம் உஸ்மானி தலைமையில் பல உலமாக்கள் சென்று இடிந்த வீடுகள், இழந்த உடைமைகள் சொல்லொணாத் துயரங்கள் என வார்த்தையில் சொல்ல இயலாச் சிரமங்களைக் கணக்கெடுத்துள்ளார்கள். ஓரிரு நாட்களில் அவர்களுக்கான நிவாரணங்களை முடிந்த அளவு வழங்க சிறப்பான ஏற்பாடுகள் நடைபெற்றவண்ணம் உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 45 பள்ளிவாசல்கள் நிவாரண முகாம்களாக மாற்றப்பட்டு அனைத்து மக்களுக்கும் உதவி செய்யப்பட்டது

(செய்தி : மாநில ஜமாஅத்துல் உலமா தலைவர்)

♦ முதலமைச்சர் நிவாரண நிதிக்கு தமிழ்நாடு வக்பு வாரியம் ரூ. 30 லட்சம் வழங்குவதாக வாரியத் தலைவர் எம். அப்துல்ரஹ்மான் அவர்கள் தலைமையில் 16.12.23 நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (மணிச்சுடர் நாளிதழ்)

♦ அயோத்தி உத்தரப் பிரதேச மமாநிலம் அயோத்தியில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் 2024 ஜனவரி மாதம் திறக்கப்படவுள்ளது. கோவில் கருவறையில் ராமர் கோவில் சிலை நிறுவப்படவுள்ளது. இந்நிலையில்தான் அன்றைய தினம் பக்தர்கள் கோவிலுக்கு வரவேண்டாம் என அறக்கட்டளையின் செயலாளர் சம்பத்ராய் பரபரப்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அத்வானி, முரளி மனோகர் ஜோசி என முக்கியத்தலைவர்களுக்கும் அழைப்பில்லை (நாளிதழ் செய்தி)

♦ அண்மையில் நடந்து முடிந்த மாநிலத் தேர்தலில் பா.ஜ.க. ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் என 3 மாநிலங்களில் வெற்றி பெற்ற நிலையில் இந்த வெற்றியால் மட்டுமே 2024 மக்களவைத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைக்கும் எனக் கூற முடியாது.

*–தேர்தல் உத்தியாளர் பிரசாந்த் கிஷோர்–*

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# நிக்காஹ் (எ) திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்). அகிலத்தின் அருட்கொடை எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும் **எங்கள் செய்கு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் நல்லாசியாலும், நிகழும் **ஹிஜ்ரி 1445 ஆம் ஆண்டு ரஜப் பிறை 13 ஆம் நாள் (தை மாதம் 11 ஆம் நாள்) 25.01.2024 வியாழக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் முபாரக்கான நல்வேளையில்**

---

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல் மர்ஹூம். **A. முஹம்மது முஸ்தபா** மர்ஹூமா. **ஆயிஷா மரியம்** இவர்களின் மகன்வழிப்பேரனும், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், எமனேஸ்வரம், மர்ஹூம். **K.S.A. ஷேக்முஹம்மது அம்பலம்** மர்ஹூமா. **K.S. மஹமூதா பீவி** இவர்களின் மகள் வழிப்பேரனும், எங்கள் செல்வப் புதல்வனுமாகிய

**தீன்குலச்செல்வன் Er. முஹம்மது ராஃபித் B.Tech., EEE.,**

**(Facilites Engineer AL Shirawi FM (LLC) dubai UAE) மணமகனுக்கும்**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சொக்கலிங்கபுரம், மர்ஹூம். **A. முஹம்மது கனி மர்ஹூமா . M. ரகுமான் பீவி** அவர்களின் மகன்வழிப் பேத்தியும் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டம் எமனேஸ்வரம், மர்ஹூம். **P.K.கமால் முஸ்தபா – ஜனாபா K. சகர்வான் பீவி** அவர்களின் மகள்வழிப் பேத்தியும் சொக்கலிங்கபுரம் **ஜனாப் Er. M. அமானுல்லா – ஜனாபா A. மெகராஜ் பேகம்** அவர்களின் செல்வப்புதல்வியாகிய

**தீன்குலச்செல்வி Dr . A. ஆஃப்ரின் பானு B,D.S. மணமகளுக்கும்**

இன்ஷா அல்லாஹ் நிக்காஹ் (திருமணம்) செய்ய பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் மேற்படி நிக்காஹ் சிங்கம்புணரி காரைக்குடி மெயின் ரோட்டிலுள்ள சிவபுரி விளக்கு மெட்ரிகுலேசன் பள்ளி அருகில் உள்ள **S.S.ரெங்கநாதன் காந்திமதி கோல்டன் பேலஸ் மேரேஜ் ஹாலில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்கள் ஹக்கில் துஆச்செய்து சிறப்பிக்கவும் பின் நடைபெறும் வருந்திலும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

**அவ்வண்ணமே கோரும்**

**ஜனாப். Er. M. அமானுல்லா Hitech Constrution .**
**ஜனாபா A. மெகராஜ் பேகம்**
**ஊராட்சி மன்றத்தலைவர்,**
**சொக்கலிங்கபுரம் ஊராட்சி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்**
செல்- 94430 70040 - 99430 27910

**தங்களன்புள்ள,**

**A . M. ஜெயினுலாபுதீன் B.Com.,**
**Ex. Accounts Manager Cars, Dubai**
**S. மஹ்பூமா பேகம் M.A.B.Ed.,**
**J. முஹம்மது நாஜிஹ் B.E., Dubai**
**R. பாஹிமா பர்வீன் B.Com.,**
**M. ஜமென் ஜியான்**
17. லூர்து நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு, திண்டுக்கல் 624003
செல் -8610828377, 9787666635

# அல்லாஹ் எனும் திருநாமம்!

அல்லாஹ் எனும் திருப்பெயருக்கு ஒரு கிறித்தவப்பெண் அளித்த அழகிய விளக்கம்.

அல்லாஹ் எனும் திருநாமத்துக்கு விளக்கம் கூறிய ஸ்பானிஷ் பெண் ஹெலன் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார். அவரது புதிய பெயர் ஆபிதா. அரபியர்களுக்கே விளக்குவதற்கு சாத்தியமற்ற ஒரு பொருளை விளக்கிய ஸ்பானிஷ் மங்கை இப்போது ஜோர்டானிலுள்ள அல்யர்மூக் பல்கலைக் கழகத்தில் அராபிக் எம்.ஏ. படித்து வருகிறார்.

ஒருநாள் பேராசிரியர் டாக்டர் ஃபக்ரிகிற்றானே என்பவர் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு பாடம் நடத்தும்போது தமது மாணவர்களிடம் உங்களில் யாராவது அல்லாஹ் என்ற வார்த்தையின் மொழி மற்றும் ஒலி வடிவத்தின் மேன்மையை விளக்க முடியுமா என்று கேட்டார்.

அரபி பேசத்தெரிந்த ஸ்பானிஷ் கிறித்தவப் பெண்ணைத்தவிர வேறு யாரும் கையை உயர்த்தவில்லை.

ஹெலன் சொன்னார்:

அரபியில் நான் படித்த மிக அழகான வார்த்தை அல்லாஹ் الله எனும் வார்த்தை.

இந்த வார்த்தைக்கு ஒரு சிறப்பு மெல்லிசை உண்டு.

நாவால் அல்லாஹ் الله என உச்சரிக்கும்போது அதனை உணரலாம்.

அல்லாஹ் என்ற வார்த்தையிலுள்ள முழு எழுத்துகளின் உச்சரிப்பும் உதடுகளின் உதவியின்றி உள்ளத்தின் உள்ளிருந்து வருகிறது. அதாவது. الله என்ற வார்த்தையை உச்சரிக்க உதடுகளின் உதவி தேவையில்லை.

அல்லாஹ் الله என உச்சரித்துப் பாருங்கள். உதடுகள் மற்றும் முகத்தில் அசைவுகள் இருக்கிறதா? அல்லது உள்ளே இருந்து உச்சரிக்கப்படுகிறதா?

உள்ளே இருந்துதான் உச்சரிக்கப்படுகிறது என்பதை உணர்வீர்கள்.

எனவே நாம் நாம் புரிந்துகொள்ள வேண்டிய உண்மை யாதெனில்...

ஒரு நிகழ்வில் الله என்று கூறும்போது உதடுகளில் அசைவு ஏற்படாததால் அதை வேறு யாராலும் தெரிந்து கொள்ள முடியாது.

மேலும் اَللّٰه என்ற பெயரிலுள்ள ஓர் அற்புதத்தைக் கவனியுங்கள். அல்லாஹ் என்ற சொல்லில் சில எழுத்துகளை நீக்கிப்பாருங்கள்.

1. முதல் எழுத்தான அலிஃபை நீக்கினால் لِلّٰه லில்லாஹ் என்று வரும். அல்லாஹ் வலில்லாஹில் அஸ்மாஉல் ஹுஸ்னா (அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் உண்டு) என்று கூறுகிறான்.

2. முதல் (அலிஃப்) மற்றும் இரண்டாவது (லாம்) எழுத்துகளை நீக்கிப் பாலருங்கள் லஹு لَه என்றாகும். இதுவும் அல்லாஹ்வைக் குறிப்பதாகும். அல்லாஹ் சொல்கிறான்(வானங்கள், பூமியிலுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியவை)

3. முதல் எழுத்தான அலிஃபயும் ا இரண்டாவது, மூன்றாவது எழுத்துகளான இரண்டு லாம்களையும் ل நீக்கிப் பாருங்கள். ه ஹு என்ற எழுத்து மட்டும் மிஞ்சும். இதுவும் அல்லாஹ்வைச் சுட்டுகிறது.

அல்லாஹ் சொல்கிறான்.அவனைத்தவிர வணக்கத்திற்குரியவர்கள் யாருமில்லை)

4. அறிஞர்கள் அல்லாஹ் என்ற செல்லைக் குறித்து ஏராளமான விளக்கங்களைக் கூறியுள்ளனர். لا اله الا الله என்ற கலிமத்துத் தவ்ஹீதிலுள்ள எழுத்துகள் அனைத்தும் உச்சரிக்க மிக இலகுவான ا ل ه எனும் மூன்று எழுத்துகளை உச்சரிக்க உதடுகளின் தேவையில்லை.

அல்லாஹ் என்ற தனது பெயருக்கு மிக இலகுவான எழுத்துகளை அல்லாஹ் தேர்ந்தெடுத்திருப்பதில் ஒரு இரகசியம் உண்டு.

நாவையும் உதடுகளையும் அசைக்க முடியாமல் கிடக்கும் மரண வேளையில் கூட لا اله الا الله என்ற கலிமத்துத் தவ்ஹீதை யாராலும் உச்சரிக்க இயலும்.

இவ்வாறு அல்லாஹ் என்ற சொல்லுக்கு நீண்டதொரு விளக்கத்தைக் கொடுத்த ஹெலன் இஸ்லாமை மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டார். அவரது புதிய பெயர் ஆபிதா என்பதாகும்.

---

**ஆதியேகா கறையும் வஞ்சனையும் கொண்டோம் ஆதியேகா.**

**ஆதியுண்மை தனை மறைக்கும் கள்ளங் கொண்டோம் ஆதியேகா.**

– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –

بِسْمِ ٱللّٰهِ ٱلرَّحْمٰنِ ٱلرَّحِيمِ

# ولَهُ أَيْضًا يُسَلِّمُ عَلٰي قُطْبِ الْمَجِيْدِ شَاهِ الْحَمِيدِ عَبْدِ الْقَادِرِ النَّاهُوْرِيِّ رَضِيَ ٱللّٰهُ عَنْهُ

## சங்கைக்குரிய குத்புல் மஜீத் (ரலி) அவர்கள் மீது குத்புல் ஃபரீத் (ரலி) அவர்கள் கோர்வை செய்த ஸலாம் பைத்

சங்கைக்குரிய ஞான மகான் ஷாஹுல் ஹமீது மீரான் சாஹிப், அஸ்ஸய்யிது அப்துல் காதிரின் நாகூரிய் பாதுஷா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஜ்) அவர்களின் பேரில் குத்புல் ஃபரீது ஜமாலிய்யா அஸ்ஸயிது யாஸீன் மௌலானா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன் இயற்றிய சிறப்புக்குரிய மேலான ஸலாம் பைத் இது.

சங்கைக்குரிய நாகூர் நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஜ்) அவர்களின் மீது முஹப்பத்துக் கொண்டு, அவர்களின் நினைவு மாதத்தை நன்றியுடன் ஞாபகமூட்டி சிறப்பிக்கும் முகமாக உலகளாவிய ரீதியில் அவர்களின் நேசர்கள். அவர்கள் பெயரில் மௌலிதுகளும், பாமாலைகளும் ஓதி வரும் இந்தக் காலத்தில், அனைவரும் ஓதிப் பயன்பெறும் பொருட்டு, அத்தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் நிறுவனர் – அறபு இலக்கியக் கலாமேதை, குத்புல் ஃபரீது இமாம், ஜமாலிய்யா அஸ்ஸய்யிது யாஸீன் மௌலானா நாயகம் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் 70 ஆண்டுகளுக்கு முன் இயற்றி வைத்த கையெழுத்துப் பிரதி, ஹக்கின் நாட்டப்படி கிடைக்கப் பெற்றதையடுத்து, தாமதிக்காது... இந்த உயரிய ஸலாம் பைத்தை சங்கைக்குரிய ஷாகுல் ஹமீது பாதுஷா நாயகம் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஜ்) அவர்களின் நேசர்கள் மஜ்லிஸ்களிலும், வீடுகளிலும், தங்களின் ஸலாத்தை நாகூர் ஆண்டகை கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஜ்) அவர்களின் தர்பாருக்கு எத்தி வைக்கவும் ஓதிப் பயனடைவதன் மூலம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும், ஹக்கின் நாட்டப்படி கிடைக்கப் பெற்ற உயரிய பைத்து என்பது சந்தேகமில்லை.

நிச்சயம் இதனைக் கொண்டு ஆஷிகீன்கள் பயனடைந்து கொள்வர். (அல்ஹம்துலில்லாஹ்

١

سَلَامٌ عَلَيْكُمْ سَيِّدِيَ ذَا الْمَفَاخِرِ
غِيَاثِيْ وَغَوْثِي مَلْجَأِي ذَا الْمَقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ شَاهُ مِيْرَانَ نَاصِرِي
مَلَاذِيْ وَاَمْنِيْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ يَا نَدٰي الْفَاطِرِيَّةِ
وَيَا سِبْطَ شَيْخِ الْحَضْرَةِ الْقَادِرِيَّةِ

سَلَامٌ عَلَيْكُمْ يَا شَذَا الطَّاهِرِيَّةِ
وَيَا ذَا الْمَعَالِيْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ يَا كَرِيْمَ الْعُلَا وَيَا ٢
جَزِيْلَ الْعَطَا كَنْزَ الْعُفَاةِ وَمُوْلِيَا
سَلَامٌ عَلَيْكُمْ يَا بَهِيْجَ الْحُلٰى وَيَا
حَفِيْدَ رَسُوْلِ اللهِ عَبْدَ الْقَادِرِ

سَلَامٌ عَلَيْكُمْ يَا مُزِيْلَ الْمُغَالَةِ
وَمُذْهِبَ عَنِّيْ كُلَّ عَجْزٍ وَعَيْلَةٍ
سَلَامٌ عَلَيْكُمْ كُلَّ يَوْمٍ وَلَيْلَةِ ٣
وَفِيْ كُلِّ حِيْنٍ شَيْخَ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ فِيْ الْمَسَا وَالضَّحِيَّةِ
وَفِيْ كُلِّ حَالٍ بِالرِّضَا وَالْهَدِيَّةِ

سَلَامٌ عَلَيْكُمْ كُلَّ فِعْلٍ سَنِيَّةٍ
وَمَا قِيْلَ حُسْنًا شَيْخَ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا زَارَ زَائِرٌ ٤
بِرَوْضَتِكَ الْحُسْنٰى وَمَادَارَ دَائِرٌ
سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا سَارَ سَآئِرٌ
اِلٰى جَانِبِ النَّاهُوْرِ عَبْدَ الْقَادِرِ

سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا قَامَ قَآئِمٌ
يُصَلِّيْ وَيَأْتِيْ بِالزَّكٰوةِ وَدَآئِمٌ
سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا صَامَ صَآئِمٌ ٥
وَمَا فَازَ بِالْغُفْرَانِ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا هَامَ هَآئِمٌ
عَلٰى حُبِّ مَنْ اَنْشَاهُ وَهُوَ مُؤَائِمٌ

سَلَامٌ عَلَيْكُمْ كُلَّمَا رَامَ رَّائِمٌ
اِلٰي جُوْدِكُمْ يَا شَيْخَ عَبْدَ الْقَادِرِ
٦ سَلَامٌ عَلَيْكُمْ صَاحِبَ الْفَخْرِ وَالْغِنَا
بِفَضْلِكَ اٰمِنِّيْ عَنِ الْفَقْرِ وَالْعَنَا
سَلَامٌ عَلَيْكُمْ عُدَّتِيْ مَغْنَمَ الْمُنَا
اَغِثْنِيْ اَجِرْنِيْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ

سَلَامٌ عَلَيْكُمْ مِنْ غُلَامِكُمْ دُعِي
بِسَيِّدِ يَاسِيْن اِشْفِهِ مِنْ تَصَادُعِ
٧ سَلَامٌ عَلَيْكُمْ يَا اَمِيْرَ تَوَادُعِ
وَ يَا شَاهْ مِيْرَانْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ
سَلَامٌ عَلَيْكُمْ وَالصَّلَاةُ مِنَ الْعَلِي
عَلَى الْمُصْطَفَى وَالْاٰلِ وَالصَّحْبِ تَنْجَلِي

سَلَامٌ عَلَيْكُمْ وَالسَّلَامُ لَهَا يَلِي
مَدًى وَعَلَيْكُمْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ
٨ **سَلَامٌ عَلَيْكُمْ حُسْنُهَا وَحَسِيْنُهَا**
**سَلَامٌ عَلَيْكُمْ حِصْنُهَا وَحَصِيْنُهَا**
**سَلَامٌ عَلَيْكُمْ ثُمُنُهَا وَثَمِيْنُهَا**
**سَلَامٌ عَلَيْكُمْ شَيْخَ عَبْدَ الْقَادِرِ**

**هٰذِهِ قَصِيْدَةٌ شَرِيْفَةٌ عَظِيْمَةُ الْفَوَائِدِ ذَاتُ تَسْلِيْمَاتٍ شَامِخَةٍ عَلَى الْقُطْبِ الْمَجِيْدِ شَاهِ الْحَمِيْدِ عَبْدِ الْقَادِرِ النَّاهُوْرِيِّ الْقَادِرِيِّ رَضِيَ اللّٰهُ عَنْهُ. نَظَّمَهَا الْقُطْبُ الْفَرِيْدُ وَالْغَوْثُ الْوَحِيْدُ جَمَالِيَّةُ السَّيِّدُ يَاسِيْنْ مَوْلَانَا الْحَسَنِيُّ الْحُسَيْنِيُّ الْهَاشِمِيُّ رَضِيَ اللّٰهُ عَنْهُ ، مُؤَسِّسُ طَرِيْقَةِ الحَقِّيَّةِ الْقَادِرِيَّةِ. نَغْتَنِمُ فَيْضَاتِهِمَا وَبَرَكَاتِهِمَا بِقِرَائَةِ هٰذِهِ الْقَصِيْدَةِ. آمِيْنْ .**

பிரபல சூஃபி பாடகர், **அல்ஹாஃபிழ். அஹ்மத் ஸாலிஹ் ஃபஹீமி** அவர்களின் தெவிட்டாத சாந்தக் குரலில் பாடிய ஆடியோவும், அழகிய வீடியோவும் சமூக வலைத்தளங்களில் விரைவில் பகிரப்படவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

பகிர்வு : **ஜனாப். ஹிஸாம் ஹிஜாஸ் ஹக்கிய்யுல் காதிரிய், இலங்கை**

# அரிதான ஞானம் எளிதாக.....

திருப்பந்துருத்தி ஜமால் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய் (அல்அய்ன்)

கலீல் அவ்ன் நாமம்
சொன்னாலே போதும்
கவலைகள் பறந்தோடுமே உள்ளம் மகிழ்வாகி விரிவாகுமே
இந்த அரிதான ஞானம் எளிதாக அறிய இனிதாக மொழிவார்களே
பேரிறை இன்பங்கள் தருவார்களே (கலீல்)

பொன்னோடு பொருளும் மேலான வாழ்வும் புவிமீது
யார் தேடுவார் தங்கள் அருளான பார்வை கிடைத்தாலே போதும்
மனம் மகிழ்வாகி உயர்வாகுவார் இறை கீர்த்தியில் நிறைவாகுவார்
இந்த அரிதான ஞானம் எளிதாக அறிய இனிதாக மொழிவார்களே
பேரிறை இன்பங்கள் தருவார்களே (கலீல்)

அழியாத ஞானம் நிலையானதென்று அழகான விளங்க வைப்பார்
உன்னத ஞானம் வஹ்தத்துல் உஜுதை தெளிவாக உணர வைப்பார்
ஞானக்கடலில் முத்தெடுக்க வைப்பார்
தவ்ஹீதின் ஞானம் தரணியில் பரவ அயராது உழைத்தார்களே
தாஹா நபியின் பேரன்பில் திளைத்தார்களே
இந்த அரிதான ஞானம் எளிதாக அறிய இனிதாக மொழிவார்களே
பேரிறை இன்பங்கள் தருவார்களே (கலீல்)
(இராகம் – காவேரி ஓரம் பாடலின் மெட்டு)

---

## உடல் நலம் பேணுவோம் !

கொலஸ்ட்ராலைக் குறைக்க ஓட்மீல் அல்லது ஓட்ஸ் தவிடு உள்ள உணவுகள், பாதாம் அல்லது அக்ரூட் பருப்புகள், ஆரஞ்சு மற்றும் கீரை காய்கறிகள், கொழுப்பு நிறைந்த மீன்கள், முழு கோதுமை ரொட்டி, பழுப்பு அரிசி போன்ற முழுதானிய உணவுகள் உட்கொள்ள வேண்டும்.

அத்தோடு உடற்பயிற்சி, புகைப்பதை நிறுத்தல், தியானம், யோகா செய்தல் மூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல் இவற்றின் மூலம் கொலஸ்டராலைக் கட்டுப் படுத்தலாம்.

# என்னை மறந்தாயா?

ஹள்ரத் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களை பக்தாத் நாட்டின் பேரழகி சந்திக்க வந்தாள். அவர்கள் முன் நின்று தேம்பித் தேம்பி அழுதாள். ஏன் அழுகின்றாய் என்ன விஷயம் சொல்? என்று கேட்க, அவள் தன் பிரச்சனையைச் சொல்லக் கேட்டவுடன் கௌதுல் அஉளம் (ரலி அவர்கள் மயக்கமடைந்து விட்டார்கள்.

மயக்கம் தெளிந்தபின் தங்கள் முரீதுகளிடம் சொன்னார்கள்:

என்னைப் பார்க்க வந்த அந்தப் பெண் “என் கணவர் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்யப் போகிறார் என்றாள். ஆண்கள் நான்கு திருமணம் முடிப்பது ஹலால்தானே என்றேன். நான் இருக்கும் இடத்தில் இன்னொரு பெண்ணை வைக்க எப்படி அவருக்கு மனம் வந்தது? ” என அவள் சொன்னதும்,

நம்மைப் படைத்துப் பரிபாலித்து எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கிற இலாஹாகிய அல்லாஹ், நாளை மறுமையில் என்னைப் பார்த்து... ‘‘நான் இருக்க வேண்டிய இதயத்தில் என்னை அல்லாத கைருல்லாஹ்வை எப்படி வைத்தாய்? என என்னைப் பார்த்துக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்” என நினைத்தேன் என அல்லாஹ்வை ஒரு நொடி கூட மறக்காத கௌதுல் அஉளம் (ரலி) அவர்கள் அருளினார்கள்.

# நெஞ்சை நெருடும் ஷஹீத் விளையாட்டு

குழந்தைகள் எந்தக் காட்சிகளை அடிக்கடி காண்கிறார்களோ, எது அவர்களின் இதயத்தில் ஆழப்பதிந்து விட்டதோ, எது அவர்களுக்குப் பிடித்திருக்கிறதோ அதை தங்களுக்கிடையே ஒரு விளையாட்டாக விளையாடி மகிழ்வதுண்டு.

பள்ளிக்கூடத்தில் தன்னைக் கவர்ந்த ஆசிரியை (மிஸ்) போல வீட்டில் சக தோழிகளுடன் ஸ்கூல் வைத்து நடத்துவது, தன் தாயைப்போல சமையல் செய்து பரிமாறுவது என இந்த விளையாட்டுகள் இருக்கும். ஆனால்... ஃபலஸ்தீன் குழந்தைகள் என்ன விளயாட்டு விளையாடுகிறார்கள் என்பது நெஞ்சை நெகிழ வைக்கும். ஒரு போர்வையில் ஒரு குழந்தையைப் படுக்க வைத்து நான்கு மூலையில் நான்கு பேர் பிடித்துத் தூக்கிக் கொண்டு போகிறார்கள்.

இது என்ன விளையாட்டு? அந்தக் குழந்தைகளிடம் கேட்டால்...

ஷஹீத் விளையாட்டு. இவள் என் சகோதரி ஹாதிதான் ஷஹீதானவள் (ஒரு குழந்தை கை கால்களை ஆட்டி விளையாடுகிறது தொட்டிலில்...) ஏன் இந்த விளையாட்டு??

‘‘ஷஹீத் என்றால் அல்லாஹ்வுக்கு ரொம்பப் பிடிக்கும்” என்று அக்குழந்தைகள் பதில் சொல்கின்றன.

# கடல் நீர் ஏன் கரிக்கிறது?

பரந்து விரிந்த நீல நிறக்கடலில் கொட்டிக் கிடக்கும் தண்ணீர் எப்போதும் வாயில் வைக்க முடியாத அளவிற்கு உப்பாக இருக்கும். அதற்குப் பின்னால் இருக்கும் காரணம் என்னவென்று நீங்கள் எப்போதாவது சிந்தித்துள்ளீர்களா?

கடல்நீரில் அதிக அளவு கரையக்கூடிய தாதுக்கள் இருப்பதால் அது உப்புத்தன்மை கொண்டதாக இருக்கிறது. இந்தத் தாதுக்கள் பெரும்பாலும் உப்புக்கள் என்று அழைக்கப்படுகின்றன. கடல் நீர் சுமார் 5% உப்புக்களால் நிறைந்துள்ளது. நீங்கள் உலகின் எந்தப் பகுதியில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து கடல் நீரில் உப்பின் அளவு மாறுபடும். பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள கடல் நீரில் உப்புத் தன்மை அதிகம் இருக்கும். அதே நேரத்தில் வடக்குப் பகுதியில் உள்ள நீரில் உப்புத்தன்மை குறைவாக இருக்கும்.

கடலில் உள்ள சில உப்பு கடலுக்கு அடியில் உள்ள எரிமலைகள் மற்றும் நீர் வெப்ப துவாரங்களிலிருந்து வருகிறது. ஆனால் பெரும்பாலானவை நிலத்திலிருந்து வருகிறது. மழை நீர் தாதுக்களைக் கரைத்து நிலத்தில் உள்ள பாறைகளிலிருந்து உப்புக்களை வெளியிடுகிறது. பின்னர் அவை ஆறுகள் மூலமாக கடலுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. சூரியன் கடலில் வெப்பமடைவதால் நீர் ஆவியாகிறது. ஆனால் உப்பு நீரியிலேயே தங்கிவிடுகிறது. இதனால் கடல் இன்னும் உப்பாக மாறிவிடுகிறது. டன் கணக்கிலான உப்பு கடல்தரையில் டெபாசிட் செய்யப்படுகிறது. ஒவ்வோராண்டும் 4 பில்லியன் உப்பு கடலில் நுழைகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே உப்பின் அளவு தொடர்ந்து குறையாமல் இருக்கிறது. பெரும்பாலான ஏரிகளில் உப்புகள் உருவாக முடியாது. ஏனென்றால் அவை ஆறுகள் மற்றும் நீரோடைகள் போன்றவற்றுக்கு நீரைக் கொண்டு செல்கின்றன. இந்த வெளியேற்றங்கள் தாதுக்கள் மற்றும் உப்புக்களை எடுத்துச் செல்லும் நீரை கடல்களை நோக்கிப் பாய அனுமதிக்கின்றன. மறுபுறம் கடலில் இருந்து நீர் வெளியேற முடியாது. கடலில் பாயும் கனிமங்கள் வெளியே செல்ல முடியாது. கடலின் தரையில் உப்பு அதிகமாகிக் கொண்டே போகிறது.

உப்புத் தன்மை குறைவாக இருக்கும் கடல் வடக்கு ஐரோப்பாவில் உள்ள பால்டிக் கடல். எந்தக் கடலிலும் இல்லாத உப்புத் தன்மை கொண்டுள்ளது. சராசரியாக ஒரு கிலோ தண்ணீருக்கு 7-8 கிராம் உப்புச் செறிவு உள்ளது. அதாவது, தண்ணீரின் எடையில் 0.7-0.8% உப்பு உள்ளது. கடலின் மிகக்குறைந்த உப்புத்தன்மை அதன் மூடப்பட்ட புவியியலின் விளைவாகும் .(இது உலகப் பெருங்கடலில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது) இங்கு நிலவும் கடுங்குளிர் காரணமாக குறைந்த ஆவியாதல் விகிதம் காரணமாக மற்றும் அதில் பாயும் பெரிய ஆறுகள் காரணமாக இந்தக் கடலில் உப்புத் தன்மை மிகவும் குறைவாக உள்ளது.

# விருந்தாளி

✸ விருந்தினரை மகிழ்ச்சி பொங்க வரவேற்றிடுங்கள். உங்கள் மனம் அவர்களின் வருகையால் சந்தோஷம் அடைவதை வெளிப்படுத்துங்கள். அதிருப்தியுடனும் மனச் சங்கடத்துடனும் அவர்களை எதிர் கொள்ளாதீர்கள்.

“யார் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் உறுதி பூண்டுள்ளாரோ அவர் தன் விருந்தினரை உபசரித்தல் வேண்டும்'' – என்பது நபிமொழி. விருந்தினரை வரவேற்பது, கௌரவிப்பது, அவர்களின் வசதி சௌகரியத்திற்கு உண்டான ஏற்பாடுகளைச செய்வது, சிரித்துப் பேசி அவர்களை மகிழ்விப்பது, கண்ணியமான முறையில் அவர்களை சாப்பிட, படுக்க ஆவன செய்வது, தமது நெருங்கிய நண்பர்கள், உறவினர்களுக்கு அவர்களை அறிமுகம் செய்வித்தல், அவர்களின் எல்லாத் தேவைகளையும் நன்கு கவனித்தல், மனம் திறந்து செலவு செய்தல், அவர்களுக்குத் தானே முன்னின்று பணிவிடை செய்தல், இவையனைத்தும் விருந்தினரை உபசரித்தலில் அடங்கும்.

அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நெருங்கிய விருந்தினர் வருகை தந்தால் தாங்களே முன்னின்று அவர்களை உபசரிப்பார்கள். விருந்தினரைத் தங்களின் உணவு விரிப்பில் அமரச் செய்து விருந்தளிக்கும்போது, ‘இன்னும் சாப்பிடுங்கள், இன்னும் சாப்பிடுங்கள்’ என்று பன்முறை சொல்வார்கள். விருந்தாளி திருப்தியாய்ச் சாப்பிட்டுப் போதும் போதுமெனச் சொல்லும் போதே வற்புறுத்துவதை நிறுத்துவார்கள்.

✸ விருந்தினர் வந்ததும் முதலில் அவர்களுக்கு ஸலாம் சொல்லுங்கள். சுகநலன்களை விசாரியுங்கள், சிறந்தவற்றைச் சாப்பிடக் கொடுங்கள். நபி இப்றாஹீம் (அலை) அவர்களிடம் விருந்தினர் வருகை தந்தபோது, அன்னார் உடனே அவர்களின் விருந்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்யலானார்கள் என குர்ஆன் வர்ணிக்கிறது. உடனே சென்று உரிய ஏற்பாடுகளைச் செய்வதென்பது, விருந்தினர்முன் ஓடியாடி, பரபரத்து தன் உபசரிப்பின் சிரமத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவது என்பது அல்ல. சந்தடி சாக்கில் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதேயாகும். இல்லையெனில் நமது பரபரப்பையும், ஏற்பாடு முனைப்புகளையும் காணுகின்ற விருந்தாளி சங்கோஜப்பட்டு சங்கடத்தில் ஆழ்வார்.

நமது ஏற்பாடுகளைத் தடுக்கவும் கூடும். பிறகு அவர்களின் உபசரிப்புப் பணியை முழுமையாக நம்மால் செய்ய இயலாது ஆகிவிடும். "யார் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ, அவர் தன் விருந்தினரை உபசரித்தல் வேண்டும். விருந்தாளிக்கு அன்பளிப்புச் செய்யும் நேரம், அவர் விருந்துக்கு வந்த முதல் நாளின் இரவும் பகலுமாகும்" (புகாரி – முஸ்லிம்)

விருந்தின் முதல்நாள் இரவு, பகலின் உபசரிப்பை 'அன்பளிப்பு' என ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளதின் கருத்து : எவ்வாறு அன்பளிப்புச் செய்பவன் மனமகிழ்வுடனும் ஆழ்ந்த பாசமுடனும் அன்பளிப்புச் செய்யும்போது ஆத்ம சுகத்தை அனுபவிப்பானோ அதே போன்று முதல் நாள் இரவு, பகலில் உபசரிப்பவனின் உள்ளுணர்வு இருத்தல் வேண்டும். மேலும் அன்பளிப்பைப் பெறுபவனின் மனம் எவ்வாறு மகிழ்வுற்று சந்தோஷ உணர்வு மேலோங்கி அன்பளிப்பாளனின் உள்ளன்புக்கு மதிப்புக் கொடுத்து தனது உரிமை என எண்ணி அன்பளிப்பைப் பெற்றுக்கொள்கிறானோ அது போன்று முதல்நாளின் இரவு, பகலின் போது விருந்தாளியும் நடந்து கொள்ள வேண்டும். உபசரிப்பாளனின் அனைத்து ஏற்பாடுகளையும் தட்டாது, நட்புறவின் நெருக்கத்தை உணர்ந்துச் செயல்பட வேண்டும்.

விருந்தினர் வந்ததும் அவர்களின் மனித இயற்கைத் தேவைகளை உணருங்கள். வயிற்று உபாதைகளை நீக்க கழிப்பறையைக் காட்டுங்கள். கை கால் முகம் தண்ணீர் கொடுங்கள். அவசியமெனில், குளித்துக் கொள்ள ஏற்பாடு செய்யுங்கள். கிப்லாவின் திசையைக் காண்பித்துக் கொடுங்கள். முஸல்லா (தொழுகை விரிப்பு) கொடுங்கள். விருந்தினர் வந்த நேரம் சாப்பாடு வேளையாக இல்லாத போதிலும் அவர்களிடம் விசாரியுங்கள். அவர்கள் தங்குகின்ற அறையை அதனுள் இருக்கும் வசதிகளைத் தெரியப்படுத்துங்கள். எந்த நேரமும் விருந்தினர் அருகிலேயே உட்கார்ந்து அவர்களைச் சோர்வடையச் செய்யாதீர்கள். இரவு வெகு நேரம் வரை அவர்களுடன் பேசிக் கொண்டிருக்காதீர்கள். அவர்கள் நிம்மதியாக ஓய்வு பெற இடமளியுங்கள். ஹஜ்ரத் இப்றாஹீம் (அலை) அவர்களிடம் விருந்தினர் வருகை தந்த போது, அவர்களின் உணவு ஏற்பாடுகளைச் செய்ய சிறிது நேரம் அவர்களை விட்டும் விலகிச் சென்றார்கள்.

✸ விருந்தினர் உண்ணுவதிலும் பருகுவதிலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள். குறுகிய மனப்பான்மையோ சங்கடமோ கொள்ளாதீர்கள். விருந்தாளி தொந்தரவாக அல்ல; இறை அருளாக, நன்மையும் பரக்கத்துக்கும் காரணமாக அமைகிறார்.அல்லாஹ் யாரை உங்களிடம் அனுப்புகிறானோ அவர்களின் இரணத்தையும் இறக்கி விடுகிறான். அவர்கள் உங்களது உணவு

விரிப்பில் உங்கள் விதியில் எழுதப்பட்டதை அல்ல; அவர்களது விதியில் எழுதப்பட்டதையே சாப்பிடுகிறார்கள். மேலும் உங்களின் கண்ணியத்தையும் மரியாதையையும் உயர்த்தக் காரணமாகிறார்கள்.

✸ விருந்தினரின் தன்மானம், கௌரவத்திற்கு மதிப்பளியுங்கள். அவர்கள் கௌரவத்தை உங்கள் கௌரவமாகக் கருதுங்கள். உங்களின் விருந்தினரின் கௌரவத்தை யாரேனும் தாக்க நேர்ந்தால் அதை நீங்கள் உங்கள் தன்மானப் பிரச்சனையாக எண்ணி, அது உங்களுக்கு எதிரான சவால் என்பதை உணருங்கள். ஹஜ்ரத் லூத் (அலை)அவர்களின் விருந்தினர் மீது அந்நகர மக்கள் தீய எண்ணத்தோடு தாக்க முனைந்த போது அன்னார் அதைத் தடுத்து நிறுத்த எழுந்து நின்றார்கள். "இவர்கள் எனது விருந்தினர், இவர்களுடன் தீச்செயல் புரிந்து என்னைக் கேவலப்படுத்தாதீர்கள். இவர்களின் கேவலம் எனது கேவலம்" என்றும் சொன்னார்கள்.

✸ மூன்று தினங்கள் வரை மிகச் சிறப்பாகவும் ஆர்வம் மேலோங்கியும் உபசரியுங்கள். மூன்று தினங்கள் வரை விருந்தை ஏற்றுக்கொள்வது விருந்தாளியின் உரிமையாகும்.

இந்த உரிமையை நிறைவேற்றுவதில் தாராள மனப்பான்மையைக் கையாள வேண்டும். அதிலும் முதல் நாளன்று உபசரிப்பில் முழுமை வேண்டும். மீதம் இரு தினங்களில் அசாதாரண கவனிப்பைக் காட்ட முடியவில்லையெனில் குறை இல்லை. ''மூன்று தினங்கள் வரை விருந்து உபசரிப்பாகும்; பின்னர் செய்வதெல்லாம் தர்மத்தில் சேர்ந்தது" – என்பது அண்ணலாரின் அமுதமொழி. விருந்து உபசரிப்பை உங்களின் பண்பாட்டுக் கடனாகக் கருதுங்கள். விருந்தினரின் உபசரிப்பைப் பணியாட்கள் மூலமோ, பிள்ளைகள் மூலமோ செய்யாதீர்கள். நீங்களே அவர்களுடைய சுக சௌகரியத்தில் அக்கறை காட்டுங்கள். சாப்பிட அமரும் முன் முதலில் நீங்கள் கை கழுவிக் கொண்டு உணவு விரிப்பை அடையுங்கள். பிறகு விருந்தினருக்குக் கை கழுவ தண்ணீர் ஊற்றுங்கள். சாப்பிட்டுக் கை கழுவும்போது முதலில் விருந்தினர் கை கழுவ தண்ணீர் ஊற்றுங்கள். கடைசியில் நீங்கள் கழுவுங்கள். இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் வழமை இவ்வாறே இருந்தது.

உணவு விரிப்பில் உணவு வகைகள், தட்டுகள், முதலியவைகளை சற்று கூடுதலாக வையுங்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது யாரேனும் வர நேர்ந்தால் அவர்களையும் சாப்பிட வைக்க இது ஏதுவாகும். வந்தவர்களும் ஏற்பாட்டை எண்ணி மகிழ்வார்கள். அவர்களின் சங்கோஜம் நீங்கும். விருந்தாளியாக வந்தவர், எப்போதேனும் உங்களோடு தவறான முறையில்

நடந்து கொண்டவராக இருப்பினும், அவரின் அந்த தவறை மனதில் வைக்காது, விசால மனத்துடன் நடந்து கொள்ளுங்கள்.

“இறைத்தூதர் அவர்களே! ஒருவரிடம் நான் விருந்தாளியாகச் சென்றபோது, அவர் என்னை சரிவர கவனிக்காமல் இருந்தார். பிறகு சில காலம் கழித்து அவர் என்னிடம் விருந்தாளியாக வர நேர்ந்தது. இப்போது நான் அவரைக் கண்ணியப்படுத்துவதா? இல்லை பதிலுக்கு நானும் பாராமுகமாய் இருந்து விடுவதா?” என்று நபித்தோழர் ஒருவர் அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டபோது, “எந்நிலையிலும் நீங்கள் விருந்தாளியின் உரிமையை நிறைவேற்றல் வேண்டும்” என பதில் கூறினார்கள்..

விருந்தினரிடம், உங்கள் நலம், பரக்கத் ஆகியவற்றுக்கு துஆச் செய்யுமாறு கோருங்கள். அதிலும் குறிப்பாக விருந்தாளி நல்லவராக, மார்க்கப் பற்றுடையவராக, கல்விமானாக இருக்கும் பட்சத்தில் அவர்களிடம் வேண்டி விரும்பி துஆச் செய்யுமாறு கோருங்கள். அண்ணலெம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விருந்துண்டு புறப்படும்போது கீழ்க்கண்டவாறு துஆச் செய்தார்கள்:

“இறைவா! இவர்களுக்கு வழங்கிய இரணத்தில் அபிவிருத்தியைக் கொடு; இவர்களின் பிழைகளைப் பொறு, இவர்கள் மீது கருணை காட்டு”.

## தமிழர் பண்பாடு குறித்து.. இ.மு.லீக். தலைவர் சிராஜுல் மில்லத் அப்துஸ்ஸமது அவர்கள்..

2000 ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் ஆறே ஆறு சமுதாய மக்களே முக்கியமானவர்கள்.

1. தமிழர்கள் 2. சீனர்கள் 3. ஆரியர்கள் 4. அரேபியர்கள் 5. ரோமர்கள் 6. கிரேக்கர்கள்

கிரேக்கர்கள் தங்களை கிரேக்கர்கள் என அழைத்துக் கொண்டதோடு மற்றவர்களை பிசாசுகள் என அழைத்தனர். ரோமர்கள் தங்களை ஆளப்பிறந்தவர்கள் எனவும் மற்றவர்கள் வாழத் தகுதியற்றவர்கள் எனவும் கருதினர். அரபியர்கள் தங்களைப் பேசத் தேரிந்தவர்கள் எனவும் மற்ற மக்களை அஜமிகள் அதாவது ஊமையர்கள் எனவும் கூறினர். ஆரியர்கள் தங்களை உயர்ந்தவர்களாகவும் மற்றவர்களை மிலேச்சர்களாக அதாவது கீழானவர்களாகவும் கருதினர். சீனர்கள் தங்களை எஜமானர்களாகவும் மற்றவர்களை அடிமைகளாகவும் நடத்தினர். தமிழர்கள் மட்டும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றனர். **இதுவே தமிழர் பண்பாடு.**

# துவிதம் விடு!

நெருப்பு நல்லதா? கெட்டதா? எனக் கேட்டால் நீ என்ன மறுமொழி பகர்வாய்? நெருப்பினால் உணவு சமைக்கவும் முடியும்; ஊரைக் கொளுத்தவும் முடியும்!

ஏக இறைவன், உனக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார்! எனவே, நல்லவற்றையே நினை! நல்லவற்றையே செய்! ஆனால் நீ எதைச் செய்தாலும் ஏகத்தின் நாட்டமே அனைத்தும் என்பதனை எக்கணமும் மறவாதே!

ஒரு பாபம் நிகழ்ந்திட்டபோது அதனை இறைவன் நாட்டமேயன்றி வேறில்லை யென்று உணர்ந்து கொள்ள வேண்டும்! அப்பாபம் நிகழ்த்தப்பட ஒரு கருவியாக– காரணியாக நீ இருந்தாய் என்பதனையுணர்ந்து உடனே அப் பாபத்தினால் உனக்குத் தீங்குவந்து விடக் கூடாது என ஏகத்திடம் பாதுகாப்புத் தேடிக்கொள்!

எப்போதும் உன்னையும் உனது செயல்களையும் புறக்கணித்து விடு!

நன்மையானாலும் தீமையானாலும் ஒவ்வொரு செயலும் மெய்யான செயல் கர்த்தாவிடமிருந்தே (உள்மூலம்) நிகழ்கிறது!

இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு செயலும் இறைவனுடைய செயல் அல்லது பண்பு அல்லது தோற்றம்; எப்பெயரிட்டும் அழைத்துக் கொள்! ஆனால் இத்தோற்றங்களில் உன்னைக் கறையச் செய்து விடு!

தாழ்மையான தோற்றங்களிலும் உனதிறைவன் காட்சிதருவான்; அவனே எப்பொருளிலும் காண்பது போல் அப்பொருளிலும்– அப்பொழிவிலும் காணத் தவறி விடாதே!

மாபெரும் அரசர் ஒரு சுமை தூக்கிபோல் வேடமிட்டு வந்தால்– யாரும் அவரை வரவேற்பதில்லை– கண்டு கொள்வதில்லை! இங்கு அரசின் அடிமைத் தனம் ஒரு திரையாக இருக்கிறது!

“ஆண்டான்– அடிமை இல்லை” என்பதன் உண்மைப் பொருள்: ஏகநிலையில், இறைவன் ஒருவன் (எனத் தனியே) உள்ளான் அவனது அடிமையாகிய நான் அங்குள்ளேன் என்னும் துவிதத்தைத் தட்டிவிடுவதே!!!

(பரமஹம்சர்)

*(சென்ற இதழ் தொடர்ச்சி....*

*தமிழ் நாடு ஜமாஅத்துல் உலமா சபை சார்பில் மாபெரும் மீலாது மாநாடு 05.11.2023 ஞாயிறு அன்று கீழக்கரை பி.எஸ்.எம். கிரேண்ட் பேலஸ் அரங்கில் பாதைகளை வகுத்த பயணங்கள் எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.*

*தாஇஃப்-அழைப்புப் பயணம், மிஃராஜ்- இளைப்பாறிய பயணம், ஹிஜ்ரத் வெற்றிப் பயணம், இறுதிப் பயணம்- இறைவன் நாடிய பயணம்- என தலைப்புகள் தரப்பட்டிருந்தது. அதில் ...*

# சிரியா – வணிகப்பயணம்

***எனும் தலைப்பில் ஆலிம் புலவர் வாசித்த கவிதை.)***

இறுதி நபியை இறைவன் ஏன் வணிகராக்க எண்ணினான்?
மனத்தை ஆளப்போகும் தன்தூதர்
பணத்தையும் ஆளப் பயிற்சி தரத்தானோ?

வணிகர்களோடு பழகும் போது –பல வகை
மனிதர்களோடு பழகும் பட்டறிவைக் கொடுக்கவோ?

ஷாம் நாட்டு வணிகர்கள் நாயகத்திடம்
நாணயத்தைக் கொடுத்து நாணயத்தைக் கற்றார்கள்.

மக்காவில் மட்டும் பேசப்பட்ட அல் அமீன் பட்டம்
சிரியா சந்தைகளிலும் பற்றிப் பரவியது!

நாயகத்திடம் பொருள் வாங்கியவர்கள்
மனதில் நாயகத்தையும் சேர்த்தே வாங்கினர்.

பொருள்கொடுத்தவர்கள் தம்மையும் சேர்த்தே கொடுத்தார்கள்.

பெருமானார்
நுபுவ்த்துக்குமுன் பெற்ற வணிக அனுபவம்
அவர்களை ஒரு பொருளாதாரப் புத்தகமாக மாற்றியிருந்தது.

இறுதித் தூதராக ஏற்றம் பெற்றபின்
அவர்கள் கொண்டு வந்த சீர்திருத்தத்தால்
மதீனா வட்டியில்லா மண்டலமாக மாறியது.

- வணிகம் மனிதகுலச் சேவை வாய்ப்பாக ஏற்றம் கண்டது.
- வியாபாரிகள் மனதில் இறையச்சம் என்ற பாரா மீட்டர் பொருத்தப்பட்டதால் அவர்களின் பெட்டகம் கள்ளப்பணமில்லாத கல்லாக்களாக மாறியது.
- அவர்கள் மக்களிடம் கொடுக்கல் வாங்கல் செய்தார்கள்–ஆனால் இறைவனிடம் வரவு செலவை ஒப்படைத்தார்கள்.
- சேல்ஸ் டாக்ஸ்–இன்கம் டாக்ஸ்– அனைத்தும் ஜகாத் எனும் ஜி.எஸ்.டிக்குள் அடங்கியது.
- பெருமானாரின் பொருளாதாரத்தில் விற்பவர் வாங்குபவரின் மனநிலையிலும் வாங்குபவர் விற்பவரின் மனநிலையிலும் பண்டமாற்றம் செய்தனர்.
- விற்பவர்–வாங்குபவர் இருவருமே ஹலால் – ஹராம் எனும் கண்காணிப்புக் கேமராவுக்கு அஞ்சியே வணிகம் நடத்தினர்
- கடைத்தெரு நன்மை சம்பாதிக்கும் மஸ்ஜிதாக மாறியது.
- குற்றமுள்ள பொருளை விற்றவர் மனசாட்சிக் கூண்டிலேறி தனக்குத் தானே தண்டனை அளித்துக் கொண்டார்.
- பேராசை ஷைத்தானைக் கட்டிப்போட்டதால் பஜாரின் பகல்கள் ரமளானின் இரவுகளாகப் பரிணமித்தது.
- கடன் தேவையுடையோருக்கு கடன் வழங்கியவருக்கு –இறைவன் 17 சதவிகித போனஸ் வழங்கினான்.
- முஸ்லிம்கள் அண்டை வீட்டாரின் பசியைப்போக்கி தங்களை முஸ்லிம்களாகத் தக்கவைத்துக் கொண்டனர்.
- அனைவரும் மறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்ந்ததால் வறுமைக் கோடு தானாகவே அழிந்து போனது.

**இன்றைய சிரியா**

சிரியா இன்று சிதைந்த பூமி
உருக்குலைந்த உடல்.
சிரியாவின் துயரத்தை –சில
வரியால்சொல்லி முடிக்க முடியாது.

உள் நாட்டுப் புரட்சி
இஸ்ரேலின் அதிர்ச்சி –இவற்றால்
அது தன் வரலாற்றுச் சின்னங்களையும் இழந்து
முகமற்ற மூலியாக நிற்கிறது.

வாச நபியின் வாசம் சுமந்த
ஷாமின் காற்றில்
கந்தக நெடி. பாஸ்பரஸ் விஷம்

பிள்ளைக்கறிகேட்கும் – அமெரிக்க
இஸ்ரேல் சிவன்கள் –எங்கள்
செல்ல மலர்களை– வெள்ளை மலர்களை
விருந்தாக்கி உண்கிறார்கள்.

நம் காலக்கர்பலா –இன்று
நம் கண் முன்னே நடக்கிறது.

**அன்றும் ஹுஸைனாருக்கு உதவ யாருமில்லை–**
**இன்றும் இவர்களுக்கு உதவ எவருமில்லை.**

**பலஸ்தீன பூமியில்– எங்கள் சகோதரிகள்**
**அன்னை ஜைனபுகளாகக் கதறுகிறார்கள்.**

முஸ்லிம் பூமியில் இந்துக் கோவில் கட்ட இடம் கொடுத்த
அபுதாபிஅரசர்களே– அரக்கர்களே

புருஜ் கலீபா கட்டி பூரிக்கும்
துபை அமீர்களே

ஊது வாசத்தில் உல்லாசமாயிருக்கும்
சவூதி இளவரசர்களே– பாதிப்பிணங்களே
உங்கள் இதயம் இளகவில்லையா?

பாலஸ்தீன் மையத்து வீடு
மையத்து வீட்டருகே –மணமணக்கும்
பிரியாணி உண்கிறீர்களே –இது தகுமா,

மிஃராஜ் பூமியில்
புராக்கு வான் வெளியில்

நபிமார்களின் கப்ருகள் அருகே
புல்டோசர்கள் கடக்கிறதே
நீங்கள் விழிக்க வேண்டாமா?

சிரியப் பயணம் செம்மல் நபியின்
வாழ்க்கைப் பயணத்ததில்
வசந்த வாசலைத் திறந்தது.

அண்ணலாரோடு ஆச்சரியத்தோடும்
அச்சத்தோடும் பயணித்த மைஸரா
மக்கா வந்ததும் மடை திறந்த வெள்ளமானார்.

தம் எஜமானியிடம்
குளிர் மேகம் குடைபிடித்ததும்
உற்சாகமாக நடந்த ஒட்டகை பற்றியும்
வணிகர்களோடு வள்ளல் நடந்த சாதுரியத்தையும்
குவிந்துவிட்ட கொள்ளை இலாபத்தையும் – மைஸரா
மனதில் பதித்த ஒவ்வொன்றையும் ஒப்படைக்கும்
ராவீயானார்.

மைஸராவின் ரிவாயத்தில் கதீஜா நாயகி
அல்லாஹ்வின் ஆயத்து அருகே வந்ததை உணர்ந்தார்
வணிகப் பயணம் புனிதப் பயணமானதை அறிந்தார்
நாயகமே தன் வாழ்க்கைத் துணையெனத் தீர்மானித்தார்

சிரியப் பயணம் அண்ணலார் –கதீஜா நாயகி
இருவருக்கும் வாழ்க்கைப்பாதையை வளமாக வழங்கியது.

**(நிறைவு – அல்ஹம்து லில்லாஹ்)**

---

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஒரு நாள் கூட தங்கள் மனைவிமார்களை அடித்தது இல்லை. (முஸ்லிம்)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: பேசினால் நல்லதையே பேசுங்கள்.அல்லது வாய் மூடி மௌனமாய் இருங்கள்.

(புகாரி ஷரீப்)

8

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின்

# 88 ஆவது புனித உதய தினவிழா

## சிறப்புச் சொற்பொழிவுகள்

மதுக்கூர் கலீபா. எம். முஹம்மது முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தங்கள் சொற்பொழிவைத் தொடர்கிறார்கள்:

மஸ்னவி ஷரீஃபிலே, மௌலானா ரூமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ரசூலுல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது அருமையான உதாரணத்தோடு விளக்குகிறார்கள்: அதாவது, முகம் பார்க்கும் கண்ணாடியைச் சாய்த்து நிற்க வைத்து, அதன் முன் ஒரு கிளியை நிறுத்தி வைத்து, அந்தக் கிளியின் எஜமானர் கண்ணாடிக்குப் பின்னே நின்று கொண்டு அம்மா, அப்பா என்று சில வார்த்தைகளைக் கற்றுக் கொடுக்கிறார். ஆனால், அந்தக் கிளி என்ன நினைக்கிறதென்றால், நம்மைப் போன்றே உள்ள இன்னொரு கிளிதான் நமக்குக் கற்றுக் கொடுக்கிறது என்பதாக நினைத்துக் கற்றுக் கொள்கிறது. ஆனால், உண்மையில் கிளிக்குக் கற்றுக் கொடுத்தது அதன் எஜமானர் தான். அதைப் போலவே, நமக்கு ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். எனினும், அவர்கள் உள்ளிருந்து அல்லாஹ்தானே கற்றுக் கொடுத்தான். இதைத்தான் மௌலானா ரூமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள் : ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உன்னைப் போன்று மனிதராகப் பிறப்பெடுத்து வந்து சொல்லிக் கொடுத்ததால், அவர்களை உன்னைப் போன்ற மனிதர் என்று நினைத்துவிடாதே, உள்ளிருந்து ஹக்குதான் போதித்தது என்பதைப் புரிந்து கொள் என்பதாக விளக்குகிறார்கள். இந்த உண்மையை விளங்காத மூடர்கள் தாம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, நம்மைப் போன்ற மனிதர் என்பதாகக் கூறிக் கொண்டு திரிகிறோம். அவர்கள் நம்மைப் போன்ற மனிதரே அல்ல.

அவர்கள் சாதாரண மனிதர் எனில், அவர்களிடம் பைஅத் செய்வது, எப்படி அல்லாஹ்விடம் பைஅத் செய்வதற்கு உதவும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் சொல்கிறான் : நபியே உங்களிடம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்வதாக பைஅத் செய்பவர்கள், நிச்சயமாக அல்லாஹ்விடம் பைஅத் செய்தவர்கள் ஆவார்கள் என்றருளுகிறான். ஏன் உடல்,

பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்வதைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள் என்றால், அல்லாஹ் அருளிய உடல், பொருள், ஆவியையே தத்தம் செய்ய மறுப்பவர்கள், எப்படி அல்லாஹ்வை அறியக்கூடிய தகுதியுடையோராக இருக்க முடியும்? இப்போது அவ்வாறு தத்தம் செய்ய மறுக்கும் மூடர்கள் கூட, தங்களது மௌத்துடைய ஹாலில் தத்தம் செய்து தானே ஆகவேண்டும். மௌத்தாகி விட்டால், உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் ஒப்படைத்து விட வேண்டும் தானே?!

இது குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ் என்ன சொல்கிறது? மரணத்திற்கு முன் மரணமடைந்து விடு என்பதாகும். மரணத்திற்கு முன் மரணமாவது என்றால் என்ன? உடல், பொருள், ஆவி ஆகிய மூன்று என்னுடையதல்ல என்று துறந்து தத்தம் செய்துவிடுவதுதான். இவை ஹக்குடையது, என்னுடையதென்று ஏதுமில்லை என்று அவை மூன்றிலும் பற்றற்று இருக்கும் நிலைக்கு வரும்போதுதான் அல்லாஹ்வைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். நாம் ஃபனாஃபிஷ்ஷைகு என்னும் நிலைக்கு வரும்போது தான் பரிபூரணத்தின் உண்மை நமக்குப் புலப்படும்.

அவ்வைப் பிராட்டியார் சொன்னதுபோல், உடலெடுத்தப் பயனெல்லாம் உடனிலை உத்தமனைக் காண் என்பது மெய்யாகிறது. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் வாரிதாத்துகளில் நாம் காணலாம்.

காலத்தின் உத்தமன் நானே, எனைக் காணாதவன் பாவி தானே, சாலச் சிறந்தனும் நானே, எனைச் சாராதவன் வாழ்வு வீணே என்பதாக அருளியிருக்கிறார்கள்.

காலத்தின் உத்தமன் நானே என்று அவர்கள் கூறுகிறார்கள் என்றால், அந்த உத்தமரைக் காணத்தான் நாம் உடலெடுத்துள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களை வெளிரங்கத்திலும் காண வேண்டும். உள்ரங்கத்திலும் காண வேண்டும். அதற்காகத்தான் நாம் இவ்வாறு பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, அதுதான் நமது இலக்காக இருக்க வேண்டும்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் பேரருளைக் கொண்டு, எனது வாழ்வில் நடைபெற்ற சின்னதொரு கராமத்தை இங்கே பதிவு செய்து எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நான் இன்று இங்கு உயிரோடு இருக்கிறேன் என்றால், நான் மட்டுமல்ல எனது குடும்பமே இப்போது வாழ்ந்து கொண்டிருப்பது சங்கைக்குரிய நமது ஷைகு நாயகமவர்கள் எங்களுக்கிட்ட பிச்சை! அது 1996ஆம் வருடம். நான் துபையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் வழக்கமாக, கொழும்பு வழியாக

இந்தியா வந்துவிட்டு, விடுமுறை முடிவுற்றதும், துபை திரும்புகையில் இலங்கையில் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைத் தரிசனம் செய்துவிட்டுத்தான் துபை செல்வேன். இதனை வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஈழத்தமிழர் பிரச்சனைகள் தீவிரமாக இருந்த நேரம். அடிக்கடி போர், சண்டை, குண்டு வெடிப்பு என சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. அதுமாதிரியான ஒரு சமயத்தில், நான் எனது மனைவி, எனது 5 வயதான மூத்தபிள்ளை, 4 வயதான இரண்டாவது பிள்ளை மற்றும் எனது 4 மாதக் குழந்தையாக இருந்த எனது மகன் ஆகிய அனைவரும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைச் சந்திப்பதற்காக வெலிகமை சென்றிருந்தோம். அது ரமளான் மாதம். மதியம் 2 மணியளவில் அங்கே சென்றடைந்தோம். அங்கே நாயகமவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது, வாப்பா நாயகமவர்கள் சொன்னார்கள் : முஸ்தபா நேற்றிரவு ஒரு கனவு கண்டோம். வானத்திலிருந்து ஒரு ரயில் வருகிறது. பூமியில் செங்குத்தாக விழப் போகிறது. அந்த இரயிலில் குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். அப்படி அந்த இரயில் விழுந்துவிட்டால் அந்த இரயிலில் உள்ள எல்லோருமே அடிபட்டு மரணித்து விடுவார்கள். அஃது அப்படி ஆகக் கூடாது, ஆகக்கூடாது என்றெண்ணி, கனவிலேயே அதனை மெதுவாக பூமியில் இறக்கி வைத்தோம் என்றருளினார்கள். அதன்பிறகு, பல்வேறு ஞான விஷயங்களைப் பற்றி நிறையப் பேசிக் கொண்டிருந்தோம். அன்று மாலை 5 மணிக்கு, கொழும்பிலிருந்து சங்கைமிகு சின்ன மௌலானா அவர்கள் போன் செய்து, மர்தானா இரயிலில் பாம் வைத்து விட்டார்கள். நிறையப் பேர் குத்தும் உயிரும் குலை உயிருமாகக் கிடக்கிறார்கள். திருட்டு வேலை செய்பவர்கள் அடிபட்டுக் கிடந்தவர்களின் உடலில் உள்ள தங்க நகைகளைக்கூடப் பறித்துக் கொண்டு செல்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அப்போது நான், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் கண்ட கனவு இதைத் தான் குறித்திருக்குமோ எண்ணிக் கொண்டேன்.

எங்கள் பயணத்திட்டப்படி, மறுநாள் அதிகாலையில் நான் வெலிகமையிலிருந்து கிளம்பி கொழும்பு வந்து, அங்கிருந்து துபை செல்ல வேண்டும். வெலிகமையிலிருந்து அதிகாலை 5 மணிக்கு இரயில் கிளம்பும். ருஹூனு குமாரி என்று இரயிலின் பெயர். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் எப்போதும் டிக்கெட் எல்லாம் எடுத்து, இரயிலில் ஏற்றி வழியனுப்பிவிட்டுத் தான் செல்வார்கள். அதிகாலை 5 மணி என்பதால், இன்னும் நன்றாக விடியாமல் இரயில் நிலையம் இருட்டாகத்தான் இருந்தது.

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், எங்களுடன் கொழும்புவரை துணைக்கு இத்ரி நானாவை அனுப்பி வைத்தார்கள். இரயில் நிலையத்தில் நாங்கள்

இரயிலுக்காகக் காத்து நின்று கொண்டிருந்தபோது, ருஹுனு குமாரி இரயில் உள்ளே வந்தது. வழக்கமாக, இரயில் நிலையத்திற்குள் இரயில் நுழையும்போது வரக்கூடிய வழக்கமான ஒலி, அசைவுகள் மாதிரி இல்லாமல் அந்த ரயிலின் நுழைவு வித்தியாசமாக இருந்தது. சடசடவென்று ஒருமாதிரியாக படபடவென்று இரயில் நிலையத்திற்குள் வந்து நின்றது. எங்களுக்கு அதனைப் பார்ப்பதற்கே ஒருமாதிரியாக இருந்தது. இரயில் நிலையத்தில் எங்களோடு பள்ளிக்குச் செல்லக்கூடிய சிங்களப் பிள்ளைகள் கூட்டமாக இருந்தனர். அனைவரும் இரயிலில் ஏறினோம். அந்த இரயில் என்ஜினைத் தவிர்த்து 7 பெட்டிகள் இருந்தன. நாங்கள் முன்னே 3 பெட்டிகள், பின்னே 3 பெட்டிகளை விட்டு நடுவில் இருந்த 4ஆவது பெட்டியில் ஏறினோம். ஏறி இரயிலில் இருந்து சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைப் பார்த்தேன். சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் கொஞ்சம் தூர நின்று கை அசைத்தார்கள். எப்போதும் அவ்வாறு கை அசைத்து வழியனுப்பி வைப்பார்கள். எங்களோடு இத்ரி நானாவும் ஏறிவிட்டார்கள். இரயில் நிலையத்திலிருந்து இரயில் கிளம்பும்போதே படபடவென்றுதான் கிளம்பியது. இரயில் வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அங்கிருந்து 7 அல்லது 8 கிலோ மீட்டர் தூரம் கடந்திருந்தது. இரயில் ஒரு செங்குத்தான மலையில் கிடைமட்டமாகத் திரும்பிச் செல்ல வேண்டும். நான் இடது புறத்தில் ஜன்னலோறமாக அமர்ந்திருந்தேன். இரயில் வலதுபுறம் திரும்பும்போது என்ஜின் எனது பார்வைக்குத் தெரிகிறது. அந்த நொடிதான் தாமதம். என்ஜினில் பாம் வைத்தமாதிரி நெருப்புண்டாகி படார் என்று சத்தம். என்ஜின் இரயிலைவிட்டுக் கழன்று ஓடிவிட்டது. இரயில் சாய்ந்துவிட்டால் செங்குத்தான் பாறையிலிருந்து அதலபாதாளம்தான். நேற்று கொழும்பில் மருதானை இரயிலில் பாம் வைத்தது போன்று, இந்த இரயிலிலும் பாம் வைத்துவிட்டார்கள் என்று நினைத்தோம். என்ஜின் இல்லாமல் மற்ற 7 பெட்டிகளும் சடன்பிரேக் போட்டது போன்று அப்படியே நின்றன. முன்னால் இருந்த 3 பெட்டிகளும், பின்னால் இருந்த 3 பெட்டிகளும் தண்டவாளத்தில் நிற்கின்றன. நாங்கள் இருக்கும் இரயில் பெட்டி பட்டும் சரிந்து சாய்ந்து நின்றது. அந்தப் பக்கம் பாறையும் பாதாளமும் தான் இருக்கின்றன. என் பிள்ளைகளுக்கு என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. ஏன் அத்தா, இரயிலை நிறுத்தியிருக்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனது பாஸ்போர்ட் வேறு இந்தச் சம்பவத்தால் இரயிலில் எங்கோ விழுந்துவிட்டது. இன்னும் விடியாமல் இருட்டாகத்தான் இருந்தது. எனது மனைவி, சாய்ந்திருந்த பெட்டிக்குள் சென்று எனது பாஸ்போர்ட்டைத் தேடி எடுத்து வந்தார்.

பின்னர், அருகே இருந்த ஒரு சிங்கள வீட்டிலிருந்து சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களுக்கு போன் செய்தோம். வாப்பா நாயகமவர்கள் உடனே வேனை

அனுப்பி வைத்துவிட்டார்கள். போனில் பேசும்போது, இப்போதுதானே அனுப்பி வைத்தோம். அதற்குள் கொழும்பு சென்றடைந்து விட்டீர்களா? என்று நினைத்தோம். என்ன நடந்தது? என்று வாப்பா நாயகமவர்கள் கேட்டார்கள். நான் நடந்தவற்றைக் கூறினேன். மேலும், முன்னால் இருந்த 3 பெட்டிகளும் பின்னால் இருந்த பெட்டிகளும் தண்டவாளத்திலிருந்து சரியாமல் நேராக நின்றன. எங்களது பெட்டி மட்டும் தான் சரிந்து விட்டது. அந்தப் பெட்டிகள் நேராக நின்றதனால் நாங்கள் தப்பித்தோம், வாப்பா என்றேன். அதற்கு சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அது அப்படியில்லை முஸ்தபா. அந்த வண்டி இரயில் நிலையத்திலிருந்து கிளம்பும்போதே ஏதே விபரீதம் நடக்கப் போகிறது என்று தெரிந்துவிட்டது. அதனை ஓதித்தான் அனுப்பி வைத்தோம். உங்கள் ஒரு குடும்பத்திற்காக அந்த இரயிலில் இருந்த அத்தனை பேரையும் காப்பாற்ற வேண்டிய நிலையாகிவிட்டது என்றருளினார்கள். யார் செய்வார் இந்த வேலையை? எங்கள் ஒரு முரீது ஒரு நாட்டில் இருந்தால், அந்த நாட்டையே காப்பாற்றுவோம் என்று சொன்னவர்கள் நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள். உங்கள் ஒரு குடும்பத்திற்காக அந்த முழு இரயிலையும் காப்பாற்ற வேண்டிய டூட்டியாகி விட்டது என்று யார் சொல்ல முடியும். அவர்கள் முதல்நாள் கண்ட கனவைத் தான் நிஜத்திலும் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். காலத்தின் உத்தமராக இருப்பவர்களாலேயே இது சாத்தியம்.

இன்னும் ஓர் உதாரணத்தை மட்டும் கூறி நிறைவு செய்யலாமென்றிருக் கின்றேன். பம்பாயில் காஜா நஜ்முத்தீன் சிஷ்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இருந்த காலம். அந்தக் காலகட்டத்தில், கடைத்தெரு வோரத்தில் அடுப்பு, பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வைத்து அமர்ந்திருப்பார்கள். நாம் மாவு மட்டும் வாங்கிக் கொடுத்தால் போதும். எணணையிட்டு ரொட்டி சுட்டுத் தருவார்கள். அதற்குக் கூலியாக சில ரொட்டிகளை எடுத்துக் கொள்வார்கள். வேறு பணம் அவர்களுக்குத் தரத் தேவையில்லை. பழைய இந்திப் படங்களில் கூட இந்தமாதிரியான காட்சிகள் வரும். அவ்வாறு ஒருவர் கடைவீதிக்குச் சென்றார். மேற்சொன்னவாறு ரொட்டி சுட்டுத் தரக்கூடிய ஒரு பெண்ணிடம் மாவைக்கொடுத்து ரொட்டி சுட்டுத் தரவேண்டும், ஆனால் அதற்குக் கூலியாக எதுவும் தரமாட்டேன் என்கிறார். அந்தப் பெண்ணோ, கூலியில்லாமல் ரொட்டி சுட்டுத்தரமாட்டேன் என்கிறார். உடனே இவர் எனக்கு ரொட்டி சுட்டுத்தரவில்லை என்றால், பம்பாயையே தலைகீழாகப் புரட்டி விடுவேன் என்கிறார். இவர்களுக்குள் இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கும்போது, ஹள்ரத் காஜா நஜ்முத்தீன் சிஷ்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அந்த வழியாகக் கடந்து செல்கிறார்கள். முன்னவர், பம்பாயைத் தலைகீழாகப் புரட்டி விடுவேன் என்ற சொற்களைக் கேட்டதும் அப்படியே நின்றுவிட்டார்கள். இவ்வாறு யார் சொல்ல முடியும். ஒன்று அவர் பைத்தியக்காரராக

இருக்க வேண்டும். அல்லது அவர் பெரிய வலியாக இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். ஹள்ரத் காஜா நஜ்முத்தீன் சிஷ்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நின்றிருந்த இடத்திலிருந்தே அந்த நபரைக் கவனிக்கும்போது, அவர் பைத்தியக்காரரா என்று பார்த்தால், பைத்தியக்காரர் மாதிரித் தெரியவில்லை. அவர் யார் என்று விசாரித்தால், அவர் ஒரு முரீது. சரி, அவரது குரு ஒரு வலியா என்று பார்த்தால், அவரும் ஒரு முரீதுதான். இவர் யாரிடம் பைஅத் என்று பார்த்தால், அவருடைய குரு தான் ஒரு வலி என்று விளங்கியது. உடனே, அந்தப் பெண்ணிடம் சென்ற ஹள்ரத் காஜா நஜ்முத்தீன் சிஷ்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், அவர் கேட்பது போல் அவருக்கு ரொட்டியைச் சுட்டுக் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால், இந்த பம்பாயைப் புரட்டுவதற்கு அவருக்கு ரொம்ப நேரம் ஆகாது என்றார்கள்.

நான் எதற்காக இந்த நிகழ்வைப் பதிவு செய்கிறேன் என்றால், ஒரு வலிமாருடைய முரீதுடைய முரீதுக்கே இவ்வளவு வல்லமை இருக்கிறதெனின், நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் முரீதுகளாகிய நமக்கு எவ்வளவு வல்லமை இருக்கும்? அவர்களின் முரீதாக இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இரயில் விபத்து நேர்ந்ததால், நான் துபைக்குச் சென்று நான் மீண்டும் பணிக்குச் செல்ல இரண்டு நாட்கள் தாமதமாகிவிட்டது. எங்கள் அலுவலகத்தின் பாஸ், எகிப்தியன், பிரிட்டீஷ் பெண்ணைத் திருமணம் செய்தவர். அவர், நான் அலுவலகத்திற்குள் நுழைந்ததும் ஹிட் ஹிம் அவுட், தி ஹமார் என்று சொல்லிவிட்டான். அரபியில் ஹமார் என்றால், கழுதை என்று அர்த்தம். நான் அலுவலகத்தில் நுழையும்போது, அந்தக் கழுதையை வெளியே விரட்டுங்கள் என்று என்னை நோக்கிச் சொல்கிறான். எனக்குக் கோபம் வந்துவிட்டது. நான் நேரே அவரிடம் சென்று, இந்த மாதிரி வார்த்தைகளெல்லாம் என்னிடம் சொல்லாதே. நான் இந்த மாதிரி இரயில் விபத்து நேர்ந்து அதில் தப்பித்து வந்ததால் பணிக்கு வரத் தாமதமாகிவிட்டது என்று சொல்லிவிட்டு எனது வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டேன். அன்றுவரை அவன் நன்றாகத்தான் இருந்தான். மறுநாள் காலையிலிருந்து திடீரென முழங்கால் முட்டிப் பிடித்துக் கொண்டு நடக்க முடியாமல் கம்பை ஊன்றிக் கொண்டு இழுத்து இழுத்து நடந்து வந்தான். வழக்கமாக அவன் அங்கிருந்த ஆங்கில மருத்துவரிடம் தான் மருத்துவம் பார்ப்பான். அவனைப் பரிசோதித்து எல்லா டெஸ்டுகளையும் எடுத்த டாக்டர், உன் உடலில் எந்தக் குறையும் இல்லை. பின்னர் உனக்கு ஏன் கால் நோவு ஏற்பட்டது என்று புரியவில்லை என்று கூறிவிட்டார். அந்த கால் பிடிப்புடனே பத்து நாட்களுக்கும் மேல் அவதிப்பட்டான்.

அவன் மனதில் ஏதோ தோன்றியிருக்கும்போல, ஒருவாரம் கழித்து ஒருநாள் என்னிடம் வந்து உனக்கு, மந்திரிப்பவர்கள் யாரும் தெரியுமா? என்று கேட்டான். நான் அப்படி யாரையும் தெரியாது என்று சொல்லி விட்டேன். நான் மந்திரிப்பவர்கள் மூலம் அவனுக்கு ஏதோ செய்து விட்டேன் என்று நினைத்துப் பயந்துவிட்டான். முன்னமே, அலுவலகத்தில் ஸ்பிரிட்சுவல் டைரக்சன் எனக்குண்டு என்று சொல்வார்கள். முஸ்தபா எந்த வேலைக்கு அனுப்பினாலும் சாதித்து விட்டு வந்துவிடுகிறார். ஸ்பிரிட்சுவல் டைரக்சன் உண்டு என்று இவனே என்னிடம் முன்னர் தெரிவித்திருக்கிறான். அதனால், அவனுக்குப் பயம் வந்துவிட்டது. அவனிடம் 21 ஆண்டுகள் பணியாற்றினேன். படாதபாடு. எகிப்தியனிடம் வேலை பார்ப்பது மிகவும் கடினம். இதுமாதிரி சொல்லொணாத இடறுகள், ஏச்சுபேச்சுகளைச் சகித்துக் கொண்டு பணியாற்றினேன். ஒருமுறை, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், முஸ்தபா உங்கள் பொறுமையைச் சோதிப்பதற்காகவே அந்த அலுவலகத்தில் உங்களை அமர்த்தியிருக்கிறோம் என்றார்கள். நானாக அங்கே பணியில் சேர்ந்து சிக்கிக் கொண்டேன் என்று நினைத்தால், அப்படியில்லை. பொறுமையைச் சோதிக்கத்தான் ஹக் அங்கே அனுப்பியது என்று அவர்கள் சொல்லியபிறகுதான் எனக்கு விளங்கியது.

ஒருமுறை எனது கூட்டாளி, கத்தாரிலிருந்து வேலைவாய்ப்பைச் சொல்லி, கத்தாருக்கு அழைத்தான். துபையில் அப்போது நான் 1800 திர்ஹம் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தேன். கத்தாரில் 2000 திர்ஹம் சம்பளம் பெறலாம் என அழைப்பு விடுத்தான். இதைக் குறிப்பிட்டு வாப்பா நாயகமவர்களிடம், நான் கத்தாருக்கு வேலைக்குச் செல்லவா என்று அனுமதி கேட்டபோது, வாப்பா நாயகமவர்கள், நீங்கள் கத்தாருக்குச் செல்ல வேண்டாம் முஸ்தபா, உங்களுக்கு 2000 திர்ஹம் வேண்டுமென்றால் இங்கேயே கிடைத்துவிடும் என்றருளினார்கள். அவ்வாறே அந்தமாதமே எனக்கு 200 திர்ஹம் இன்கிரிமென்ட் கொடுத்து, 2000 திர்ஹம் சம்பளம் வந்துவிட்டது. இதுமாதிரி எல்லாமே அவர்கள் பொறுப்பில் தான் இருக்கிறது.

என்னைத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த அந்த எகிப்திய பாஸுக்கு லங்ஸ் கேன்சர் வந்து 21 நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்தான். அவனது பிரிட்டிஷ் மனைவி அந்தக் காலகட்டத்தில் என்னிடம் வந்து உங்கள் ஸ்பிரிட்சுவல் டாடியிடம் எனது கணவருக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்று கேட்டார். கவலைப்படாதீர்கள், சரியாகிவிடும் என்றேன். பின்னொருநாள் இறந்துவிட்டான். இதுகுறித்து வாப்பா நாயகமவர்களிடம் தெரிவித்தபோது, முஸ்தபா உங்களுக்கு அவன் ரொம்பத் தொல்லை கொடுத்தான். அதனால், அந்த ரூஹை விட்டு விட்டோம்

முஸ்தபா என்றார்கள். எப்படி இருக்கிறது விஷயம் என்று பாருங்கள். நமது பணிக்காலத்திலும் மொத்த வாழ்விலும் நாம் அனைவரும் அவர்கள் பொறுப்பில் தான் நடந்து கொண்டிருக்கிறது. நாம் வெறும் கருவி மட்டுமே என்பதை விளங்கிக் கொண்டு, அவர்கள் என்ன சொன்னார்களோ அதனை அப்படியே முழுமையாக அடிபணிந்து செயல்படுவோம் என்று இந்தத் தருணத்திலே கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி வஸ்ஸலாம்.

–என்பதாக, மதுக்கூர் கலீபா எம். முஹம்மது முஸ்தபா அவர்கள் தங்கள் உரையை நிறைவு செய்தார்கள்.

தொடர்ந்து, நிகழ்ச்சி நெறியாளர் கலீபா. ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள் : நன்றி கலீபா அவர்களே. அருமையான உரை. சிறிது நேரம் அதிகமாக எடுத்துக் கொண்டாலும் முத்து முத்தான அருமையான கருத்துகளை நம்மோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். அடுத்து நமக்கு மத்தியில் சொற்பொழிவாற்ற, இராமநாதபுரம் ஜனாப். பீர் ஒலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் வருகிறார்கள். நேரம் வேகமாகக் கடந்து கொண்டிருக்கிறது. எனவே, பேச்சாளர்கள் சுருக்கமாக உரையாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கலீபா. முஸ்தபா அண்ணன் பேசும்போது, உயிரைக் காப்பாற்றினார்கள் என்று சொன்னார்கள். முரீதுகள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது, நம்மை ஒரு பார்வை பார்க்கிறார்கள் என்று சொன்னால், நமது ஆயுளை நீட்டிச் செல்கிறார்கள் என்று பொருள். நமது குடும்பத்தாரை வாப்பா நாயகமவர்களின் திருச்சமூகத்தின் முன் நிறுத்துகிறோம் என்றால், குடும்பத்தாரை எந்த ஆபத்துகளும் நேராமல் பாதுகாக்கிறார்கள் என்று பொருள். நாம் அனைவரும் சூழ்ந்திருக்க மஜ்லிசுகளிலே வாப்பா நாயகமவர்கள், எந்தப் பெரிய நோய் நொடிகள் சூழாமல், விபத்துகள் ஆபத்துகள் நேராமல் மேன்மையோடு வாழ வேண்டும் என்று துஆச் செய்கிறார்களே, அவை அனைத்தும் அவர்களது பார்வையிலேயே அவர்களது பொறுப்பிலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அனுபவப் பூர்வமாக உணர்ந்து வருகிறோம் என்றார்கள்.

*(விழா உலா வரும்...)*

**தொகுப்பு : இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி, M.A., MLIS., ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

# மதீனாவில் ஓர் இடம்...

ஒரு முறை செய்கு ஈஸா அல் – பயானூனீ அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கனவில் கண்டார்கள். அக்கனவில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உங்களுக்கு நாங்கள் மதீனாவில் ஓரிடத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம் எனச் சொன்னார்கள்.

அந்த வருடம் செய்கு அவர்கள் மதீனா முனவ்வராவுக்குச் சென்றார்கள். அங்குச் சென்ற சில நாட்களிலேயே சுகவீனம் அடைந்தார்கள். தொடர்ந்து மூன்று நாட்கள் நோய்வாய்ப்பட்டு வஃபாத்தானார்கள். பின்னர் ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

செய்கு அவர்களின் மண்ணறை பல தடவைகள் அரசாங்கத்தால் மீளத் தோண்டப்பட்டபோது அவர்கள் சிறிது நேரத்துக்கு முன் அடக்கப்பட்ட ஜனாஸா போல் காணப்பட்டார்கள்.

அவர்கள் ஒரு ஷஹீதாக மரணமடையவில்லை. சாதாரண காய்ச்சல் காரணமாகவே இறந்தார்கள். அவர்களின் உடல் ஏன் அவ்வாறு காணப்படுகிறது என்பதை விளக்கிய அறிஞர்கள், செய்கு அவர்கள் தாம் வாழும் காலத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றி ஒரு கவிதை எழுதினார்கள். அந்தக் கவிதை இவ்வாறு இருந்தது.

எந்த உடல் அஹ்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்பில் நிறைந்து ஆதிக்கம் செலுத்துமோ, அல்லாஹ்வின் குத்ரத்தால் அந்த உடலை மண் கூட நுகர முடியாது. இதன் காரணமாக அவர்களது உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஸல்லல்லாஹுஅலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

---

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை ரத்துச் செய்த நீதிமன்றத் தீர்ப்பில் சட்ட ரீதியான மதிப்பு ஏதும் இல்லை. 2019 இல் ஒருதலைப்பட்சமாக சட்டம் இயற்றிய இந்தியாவின் இந்த நகர்வை சர்வதேச சட்ட விதிகள் அங்கீகரிக்காது. ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் மற்றும் காஷ்மீர் மக்களின் விருப்பத்தின் பேரில் முடிவு எடுக்கப்பட வேண்டும். அதனால் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் ஆதிக்கத்தை பாகிஸ்தான் ஏற்கவில்லை. சிறப்பு அந்தஸ்து ரத்து காரணமாக காஷ்மீர் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் அதிகாரம் இழந்த சமூகமாக இருக்கின்றனர்.

*(பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜலீல் அப்பாஸ் ஜீலானி–இந்து நாளிதழ்)*

# பிள்ளைமனம் கல்லா?

இளைஞரொருவன் மிகுந்த கோபத்துடன் அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தான்.

இறைத்தூதர் அவர்களே! அந்தக் கிழவனின் தொல்லை தாங்க முடியவில்லை. அதிகம் தொல்லை கொடுக்கின்றார். என்று ஆதங்கமாக முறையிட்டான். அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லலம் அவர்கள் அமைதியாக நீ யாரைப்பற்றி முறையிடுகிறாய்? என்று கேட்டார்கள்.

வேறு யார்? என் தந்தைதான்! நான் சம்பாதித்து வரும் பொருளையெல்லாம் அவர் எடுத்துக் கொள்கிறார். அடிக்கடி பணம் கேட்கிறார். என் சட்டைப் பையில் காசு இருந்தால் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் எடுத்துக் கொள்கிறார்.

இறைத்தூதர், அந்த இளைஞனின் தந்தையை அழைத்துவர ஆள் அனுப்பினார்கள். சற்று நேரத்தில் வயதான மனிதர் ஒருவர் தள்ளாடித் தள்ளாடி நடந்துவந்தார். அண்ணலார் அந்த முதியவரை அமரவைத்து பெரியவரே உங்களைப்பற்றி உங்கள் மகன் சொன்னதெல்லாம் உண்மைதானா? என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த முதியவர், நாயகம் அவர்களே! இவன் என் மகன், இவனை வளர்த்து ஆளாக்க நான் பட்ட சிரமங்கள் ஒன்றா இரண்டா? இவன் நிம்மதியாக உறங்க வேண்டும் என்பதற்காக நான் தூங்காத இரவுகள் எத்தனை? எத்தனை?

இவனை என் மார்பிலும் தோளிலும் போட்டு எப்படியெல்லாம் செல்லமாக வளர்த்தேன்? இவன் பலவீனமாக இருக்கும்போது நான் பலசாலியாக இருந்தேன். இவன் ஒன்றுமில்லாதவனாக இருக்கும்போது நான் பணக்காரனாக இருந்தேன். அப்போதெல்லாம் என் பொருட்களை எடுத்துப் பயன்படுத்துவதை நான் தடுக்கவில்லை. இவன் கேட்காமலே இவனுக்கு எவ்வளவோ செய்தேன்!

இன்று நான் பலவீனனாகிவிட்டேன். இவன் பலசாலியாகவிருக்கிறான். நான் ஒன்றுமில்லாதவனாகிவிட்டேன். இவன் பணக்காரனாகிவிட்டான். ஆனாலும் இவன் எனக்கு ஏதும் தருவதில்லை. நானாக எடுத்தாலும் தடுக்கின்றான் இது நியாயமா இறைத்தூதர் அவர்களே? என்றார்.

முதியவர் பேசப்பேச அண்ணலாரின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. இறைத்தூதர் அவர்கள், அந்த இளைஞனிடம் நீயும் உன் சம்பாத்தியமும் உன் உடைமைகள் அனைத்தும் உன் தந்தைக்குரியவையே! என எச்சரித்து அனுப்பினார்கள். (துப்ரானி)

பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையரை கொஞ்சம் கூட மனதில் இரக்கமில்லாமல் முதியோர் இல்லத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடும் இளைஞர்கள் சிந்திப்பார்களா?



# மதுரஸா நன்கொடை



### மதுக்கூர்

நிலோபர் நிசா பஷீர் நிம்மதியான வாழ்வுக்கு துஆச் செய்ய நன்கொடையாக ரூ. 500 /-ம்,

தஞ்சாவூர் வாவா முகம்மது அம்மா பொண்ணு நிறைவாழ்வுக்கு துஆச் செய்ய நன்கொடையாக ரூபாய் 200 /-ம்,

எ. நூர்ஜஹான் பீவி பூரண சுகத்துக்கு துஆச் செய்ய நன்கொடை ரூபாய் 500 /-ம்,

ஷம்சியா பர்வீன் அக்பர் அலி இவர்களின் மேன்மையான வாழ்வுக்கு துஆ செய்ய 5000/-ம்,

எஸ். முஃப்லிலா செரின் செய்யது அகமது மேன்மையான வாழ்வுக்கு துஆ செய்ய ரூ. 2000 /-ம்,

ராஜா முகமது தமது தொழில் சிறப்பாக நடக்க துஆ செய்ய மதரசா நன்கொடையாக ரூ. 3000 /-ம்,

எம். முகம்மது இபுராகிம் தமது தொழில் சிறப்பாக நடக்க துஆ செய்ய நன்கொடையாக ரூ. 1000 /-ம்,

### திண்டுக்கல்

திண்டுக்கல் ஜே. முஹம்மது சதக்கத்துல்லா அவர்களின் இளைய மகன் எம். ஜைனுலாபுதீன் ப. அப்ரின் திருமணம் ஷைகு நாயகம் அவர்களின் துஆ ஆசியால் நல்ல முறையில் நடைபெற்றது. மணமக்கள் நோயின்றி நீண்ட ஆயுளுடன் நிறைந்த செல்வம் பெற்று மகிழ்ச்சியுடன் ஒற்றுமையாக வாழ துஆ செய்ய வேண்டி 20.12.2023 ஆங்கில தேதி ஷைகு நாயகம் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதிய சிறப்பு உணவுக்கு ரூ. 15000/ம்.

மதுக்கூர் எம்.எஸ். அப்துல் வஹாப் பேரன் முகம்மது பத்தாஹ் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆரோக்கியமான நீண்ட ஆயுளுடன் வாழ துஆ செய்ய ரூ. 5000/ம்.

மேலத்திருப்பூந்துருத்தி நஜ்முன் நிஷா பரக்கத்தான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 500/ம்,

காந்திகிராமம் என். பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 600/ம்.

திண்டுக்கல் எ. ரியாஜ் அஹமது நிய்யத் படி ரூ. 602/ம்.

திருப்பத்தூர் எஸ். சௌக்கத அலி அவர்களின் மாமனார் மர்ஹூம் எஸ்.எம். அப்துல் முத்தலிப் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500/ம்.

காந்தி கிராமம் ஜே. இஸ்ஃபா பிறந்த தினத்தை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 700/ம்.

திருச்சி (குவைத்) எ. முஹம்மது மீரான் துஆ செய்ய ரூ. 1001/ம்.

மதுரை கே. புதூர் எஸ். சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/ம்.

காரைக்கால் ஆர்.ஏ. அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் நீங்கி குடும்பத்தினர் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய ரூ. 500/ ம்.

வழுத்தூர் நூர்ஜஹான் துஆ செய்ய ரூ. 2000/ம்.

வழுத்தூர் முஹம்மது அம்மார் துஆ செய்ய ரூ. 500/ம்.

கிளியனூர் எ. அப்துல் பத்தாஹ் கண் புண் பரிபூரணமாகி உடல் நலம் பரிபூரண சுகத்திற்கு துஆ செய்ய ரூ. 500/ம்.

குடவாசல் மெஹர் பானு பீவி உடல் நலம் பரிபூரண சுகமடைய வேண்டி துஆ செய்ய ரூ. 500/ம்.

கீழக்கரை ஆய்ஷத் மாபிதா மகனுக்கும் - மகளுக்கும் சாலிஹான மணமகன் - மணமகள் அமைய வேண்டி துஆ செய்ய ரூ. 500/ம்.

மேலத்திருப்பூந்துருத்தி பி. சுமையா பிறந்த தினத்தை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்.

மேலத்திருப்பூந்துருத்தி பி.ஹாஷிம் புதிய பைக் வாங்கியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 500/ ம்.

சென்னை சாக்கீர் அஹமது ஜுவேரியா நாச்சியார் துஆ செய்ய ரூ. 1000/ம்.

சென்னை எஸ். சர்மிளா உசேன் உண்டியல் சேமிப்பு காணிக்கையாக ரூ. 1500/ம்.

புத்தூர் சஹாபுதீன் துஆ செய்ய ரூ. 600/ம்.

மடத்துக்குளம் எஸ்.பி. சேக் அப்துல்லா சாலிஹா பீவி துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 700/ம்.

சென்னை பரீதா துஆ செய்ய ரூ. 500/ம்.

சோழிங்க நல்லூர் என். ஹைருன்னிஷா நிய்யத்து ரூ. 1000/ம்.

புதுக்கோட்டை என். ஜமால் முஹம்மது துஆ செய்ய ரூ. 1000/ம்.

பாக்கம் கோட்டூர் அயானா நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு துஆ செய்ய ரூ. 1000/ ம்.

கடலங்குடி முஹம்மது நாச்சியா நல்லபடியாக குழந்தை பிறந்து தாயும் சேயும் நலமுடன் வாழதுஆ செய்ய ரூ. 1000/ம்.

ஆய்ப்பாடி ஷேக் அலாவுதீன் அலிமா பேகம் மகள் நூருல் ஷிபாயாவிற்கு இரண்டாம் தாரம் மணமுடிக்க நல்ல வரன் வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/

திண்டுக்கல் ஜைனுல் ஆபிதீன் அவர்கள் மகன் ஜே. முஹம்மது ராஃபித் -ஏ.ஆஃப்ரீன் பானு (25.1.2024) திருமணம் சிறப்பாக நடைபெற நிய்யத் செய்து 4 சிப்பம் அரிசி (120 கிலோ) வும்,

**திருச்சி**

இஞ். காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.5000/-ம்,

ஆழியூர் அஹ்மத் கபீர் உண்டியல் சேமிப்பு நன்கொடை ரூ.9550/-ம்,

அப்துல் கையூம் நன்கொடை ரூ.2000/-ம்,

இஞ்.காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.5000/-ம்,

இஞ்.காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.5000/-ம்,

இஞ்.காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.9000/-ம்,

இஞ்.காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.5000/-ம்,

அப்துல் மாலிக் (வைத்தியர்) நன்கொடை ரூ.1000/-ம்,

இஞ். காஜா முஹிய்யுத்தீன் நன்கொடை ரூ.5000/-ம்,

கான் முஹம்மது (ஜே.எம்.சி) ரூ.1000/-ம்,

திண்டுக்கல் ஹாஜியா எ. நக்மா மர்ஹிம் பி. கமர்தீன் நிய்யத்து துஆ செய்ய ரு. 1000/ம்,

விஜயகோபாலபுரம் எ. நத்ஹர்ஷா மறைஞானப் பேழை வளச்சி நிதி ரூ. 1000/ம்,

**வழங்கினர். அல்லாஹ் வழங்கிய வள்ளல் களுக்கு அவர்களின் நாட்ட தேட்டங்களைப் பூர்த்தி செய்வானாக.**

பிரபஞ்சமே ஓருடல். அதிற் காண்பன அதன் அங்கங்கள். கடவு ளெனத் தனித் தொருவன் நின்றனன்; வானத்தில் வதிவிடங் கொண்டனன்; எனின், அது இறையாக வியலாதென்க. இறை அனைத்தின் கண்ணும் நீக்கமற இடனின்றி விரவிக் கலந்தது; அதுவிது வெனலாகாது யாங்கணும் நிறைந்தது. நானே, நாமேயெனும் அருவசூக்குமங் கொண்டது. தானே தன்னிற் றானாய் நின்று பிறிதொன்றிலதாய் விளங்குவது. உண்மையானது;உள்ளமையானது. இதனைத் தன்புத்தியிற் றெரிந்து தெளிந்தவன் உணர்ந்தனனென்க. மற்றவன் மருண்டன னென்க. வெருண் டனனென்க. வாழ்க பிரபஞ்ச மாசத்து! வாழ்க வியற்கையழகெனும் எழிற் செல்வம்!!வாழ்க!!

*- சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் -*

## பிறந்த நாள் வாழ்த்து!

ஆறாறுக் கப்பால் அணுவாக வந்துதித்த
அண்ணலின் சுடராம்
பாலாறு தேனாறு மிஞ்சும் சுவை மிக்க
அவ்ன் நாதர் அளித்த அருட்கொடையாம்
அவ்ன் நாதர் அருட்கொடையாய் கலீல் நாஜிதா
குலக் கொழுந்தாய் வந்துதித்த முஹம்மது பாளில்
அண்ணல் நபி (ஸல்) வழியினிலே அவ்ன் நாதர் நெறியினிலே
என்றென்றும் வளம் நலம் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ
ஏந்தல் எங்கள் அவ்ன் நாயகத்தை என்றென்றும் வேண்டுகிறோம்.

ஆமீன்.

**அப்பா : கலீபா. அட்வகேட். ஏ.என்.எம். லியாகத் அலி பி.எஸ்.ஸி.பி.எல் ஹக்கிய்யுல் காதிரி.**

**பாட்டி :** ரமேஜான் ஹக்கிய்யுல் காதிரி
**அப்பா :** அப்துல் கரீம் ஹக்கிய்யுல் காதிரி
**அத்தம்மா :** நஜ்மா பீவி ஹக்கிய்யுல் காதிரி
**பெரியத்தா :** அப்துல் வாஹிது ஹக்கிய்யுல் காதிரி
**பெரியம்மா :** பாத்திமா சாஜிதா ஹக்கிய்யுல் காதிரி
**அண்ணன் :** Dr. சமீர் முஹம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரி
**ஆச்சி :** நூருன் நதிய்யா ஹக்கிய்யுல் காதிரி
**அத்தா :** Dr. முஹம்மது கலீல் ஹக்கிய்யுல் காதிரி
**அம்மா :** பாத்திமா நாஜிதா ஹக்கிய்யுல் காதிரி
**ஆச்சி :** பாத்திமா நாதிரா ஹக்கிய்யுல் காதிரி
**சின்னத்தா :** ஆசிக்குர் ரஹ்மான் ஹக்கிய்யுல் காதிரி
**சித்தி :** பாத்திமா வாஜிதா ஹக்கிய்யுல் காதிரி
**ஆச்சி :** மாதிஹா ஹக்கிய்யுல் காதிரி

# M. முஹம்மது பாளில்

பிறந்த நாள்: 18.1. 2023



Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee